64

64

பார்த்திவஹு
வைகாசி - ஆனி மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 4
ஸஞ்சிகை - 6

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

“அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாய ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥”

பக்கம்

விஷய ஸூசிகை :—1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 51
2. நம் தற்கால நிலை 53
3. க்ருஷ்ணன் குழலூதற் சிறப்பு 54
4. ததிபாண்டன் வரலாறு 57
5. செய்திகள் 59
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 63

June 45

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[5-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி]

டம்பன் :—அடியே! (அரே). என் தர்ம பத்நியாகிய குஹநையே! உன்னைத்தான் கூப்பிட்டுப் பேசுகிறேன். தேவகுரு ப்ருஹஸ்பதிக்குத் தாரையும், ந்யாய ஶாஸ்த்ர ப்ரவர்த்தகரான கௌதம ருஷிக்கு அஹல்யையும் பத்நி ... போல, ‘அகலகில்லேன் இறையு’மென்று ஒரு க்ஷணமேனும் ... தவளும் அயல் புருஷனைத் தொடாதவளுமான நீயே என் ... ஷத்தில் யாக்ஞவல்க்யர் மைத்ரேயியை ‘அரே’ என்று ... போல், இங்கு ‘அரே’ என்று கூப்பிட்டு டம்பன் பேசு... தலிய தர்ம க்ரியைகளை டம்பத்திற்காக தர்ம்த்வஜனைச் ... நயைத் தழுவியேயிருப்பான். வஞ்சனை அவனை விட்டு

JL
Q22m211, N41
N45.4.6.
210138

குஹனை :—ப்ராம்ஹணேச்வரரான நீங்கள் பேசுவது சரி. ஆகிலும், உமது த்ருஷ்டாந்தங்கள் எனக்கு வெட்க முண்டாக்குகின்றன. 'வஸிஷ்டருக்கு அருந்ததியைப்போல' என்றல்லவோ என் ஸ்வாமி என்னைப்பற்றிப் பேசவேணும். வஞ்சனையையே தழுவிய திருடர்கள், சூதாடிகள், க்ராமக் கணக்கர்கள், ராஜ மந்த்ரிகள், பாஷண்டிகள் முதலியவர்கள் என்னை விரும்பி அணைய அழைக்கும்போது, உம்மை மனதால் தழுவிக்கொண்டே நீரேயென்ற நினைப்புடன் அவர்களைத் தழுவுகிறேன். [விவாஹ காலத்தில் வஸிஷ்டரையும் அருந்ததியையும் வானத்தில் நக்ஷத்ர ரூபமாகப் பரஸ்பரம் காட்டிக்கொண்டு பாதிவ்ரத்ய ப்ரதிஜ்ஞை செய்துகொண்டதை அநுஸரித்து, அந்த அருந்ததி தாரா (நக்ஷத்ர) த்ருஷ்டாந்தம் எனக்கு உசிதமேயொழிய, குருவையும் தாரையையும் த்ருஷ்டாந்தமாக எடுத்தது என் கற்பைப் பழிப்பதாகும். வஞ்சகரெல்லாம் குஹனையைத் தழுவி வேஷம் போட்டு ஏமாற்றுபவரே.]

டம்பன் :—ஆகையால் நீ ஸர்வலோக பதிவ்ரதை. [வஞ்சனை என்பது குணமானபடியால், அந்தக் குணமுடைய மோசக்காரர்களையெல்லாம் இல்லானைப்போல முழுமனதுடன் தழுவி நிற்கும்] அக்நி ஹோத்ரியான என்னுடைய கார்ஹபத்யம் முதலிய ஸ்ரௌதாக்நிகள் எப்பொழுதாவது அணைந்தால் உடனே எங்கிருந்தாவது நெருப்பைக் கொண்டுவந்து அணைந்ததே தெரியாமல் நீ மூட்டிவிடுகிறாய். அதனால் என்னுடைய அக்நிஹோத்ரம் தடங்கல் இல்லாமலே நித்யமாக நடக்கிறது. அமாவாஸ்யை பௌர்ணமாஸ்யை பர்வத்திற்குமுன் நீ புஷ்பவதியானால், அதை வெளிப்படுத்தாமலேயே, தர்சபூர்ணமாஸ பர்வக்ரியைகளை ஓய்வில்லாமல் நடப்பிக்கிறாய். விச்சேதமேயில்லாததால் ப்ராயச்சித்தம் செய்யும்படி நேர்வதேயில்லை.

குஹனை :—ஏன் அந்தப் பாபம். புஷ்பம் தோன்றினாலல்லவோ அதை மறைக்க நம்மிடம் மிகவும் ப்ரஸந்நமான நம் குலதேவதைகள் தடங்கலன்றியில் நித்யமாக நம் அக்நிக்ரியைகள் நடக்கும்படி காக்கிறார்கள். புஷ்பம் உண்டானால் அதை வெளிப்படுத்தவேண்டியதுதான் முறை. பர்வ தினங்களில் குலதேவதாநுக்ரஹத்தால் அது ஒதுங்கிவிடுகிறது.

டம்பன் :—அதுவே சரி. அம்மா குஹனே! அதே சரி. நீ டம்பன் ஸஹதர்மசரியல்லவோ? என் ப்ராம்ஹண்யத்தை ஸ்தாபிக்கும் யஜ்ஞபத்நி நீ. பாணிநி ஸூத்ரத்தில் சொல்லும் பத்நி நீயே. நிகரற்ற ச்ரோத்ரியனான எனக்கு நீ தர்மபத்நீ. எப்பொழுதும் தீராப் பசியுடைய எனக்கு ஏகாதசிகளான ஹரி தினங்களில் ம்ருஷ்டாந்நத்தால் வயிற்றை நிரப்பி, த்வாதசிகளில் பல வீடுகளில் அகஸ்த்யசாகம் நெல்லிக்காய் சுண்டைக்காய் முதலிய பாரணா த்ரவ்யங்கள் வேண்டுமென்று கேட்டுவாங்கி ஏகாதசி உபவாஸமிருந்து, நான் பாரணை அநுஷ்டிப்பதுபோல் ஜனங்களை நம்பும்படி செய்கிறாய். ரஹஸ்யமாக உனக்கு உபதேசம் செய்கிறேன் கேள். கலிபுருஷனே விக்ரஹமெடுத்ததுபோன்ற ஸந்யாஸி வேஷதாரிகளான வஞ்சகர் சிலர் உளர். ராவணார்ஜுந ஸந்யாஸிகள் ஸந்யாஸி வேஷத்துடன் ஸீதையையும் ஸுபத்ரையையும் அபஹரித்ததுபோல, அவர்கள் உன்னை அபஹரிக்கப் பார்ப்பர். நீ என்னைவிட்டு அகலவே கூடாது. உத்தம ப்ராம்ஹணனான எனக்கு உன்னைப்போல் ஒரு பெண்மணியும் சுச்ரூஷை செய்யமாட்டாள். பூமண்டலத்திலும் ஸ்வர்க்கத்திலுமுள்ள சிறந்த ஸுகங்களையெல்லாம் ஸம்பாதித்துக்கொடுக்கவல்ல நம் ராஜா மஹாமோஹருக்குக் கெடுதல் செய்யவே முயற்சி செய்துவரும் விவேகன்பேரில் அபிசார ப்ரயோகம் செய்யும்படி நம் ராணி துர்மதி என்னை அழைத்துச் சொன்னாள். 'குழந்தாய், டம்பனே! எல்லா தர்ம க்ரியைகளையும் நீ உள்புகுந்து வீணாக்கி விவேகனை த்வம்ஸம் செய்யவேணும்' என்று அவள் என்னை ப்ரார்த்தித்தாள். ஆகையால், எனக்கென்று நான் ஓர் ஆசையில்லாதவனாகிலும்! மஹாராணி தாக்ஷிண்யத்திற்கு உட்பட்டு, 'ஆததாயிகளான அறுவர் விஷயத்தில் அபிசார ப்ரயோகம் செய்யாத

வர் கெடுவர்' என்னும் மஹர்ஷி வசநத்தைக் கைக்கொண்டு, ஒருவரும் காணாத ஒரு தேவதையை நியமத்தோடு ஆராதிக்க ஸங்கல்பித்திருக்கிறேன். லோக பாலர்களுக்குக் குருவான ப்ருஹஸ்பதி தேவகங்கையில் ஸ்நாநம் செய்து நியதராய்ப் பறித்துக்கொண்டு வந்து கொடுத்த பாரிஜாத புஷ்பங்களையும் பழங்களையும் எடுத்துவா. [அக்நிதன், விஷதன், ஶஸ்த்ரமும் கையுமாய் எதிர்த்து வருபவன், தநத்தை அபஹரித்தவன், பூமியை அபஹரித்தவன், தாரத்தை அபஹரித்தவன் ஆகிய அறுவரும் ஆததாயிகள். இவர்களைக் கொல்ல அபிசார ப்ரயோகம் செய்யலாம்.] [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

நம் தற்கால நிலை

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், வித்வான், M.A., L.T.]

(ஸம்புடம் 4, ஸஞ்சிகை 4, பக்கம் 30-ன் தொடர்ச்சி)

அந்ய மதத்தினரைப் பாருங்கள். அவர்கள் எத்துணை ஊக்கமும் அன்பும் ஆர்வமும் த்யாக புத்தியும் உடையவரா யிருக்கின்றனர். 'இவர் நம் நாட்டிற்கு எப்பொழுது வந்தனர்? எதற்காக வந்தனர்? எப்படி வந்தனர்?' என்பதை ஆராய இது ஸமய மில்லை. அவர்கள் வந்து விட்டனர். நம்மிடை வாழ்ந்தும் வருகின்றனர். அவர்களால் நம் ஸமய நிலை எங்ஙனம் பாதிக்கப்படுகின்ற தென்பதே ஈண்டு ஆராயத்தக்க விஷயம். வைதிக மதத்தின் விசித்ரமான ஓர் நிலைமையால், பல்லாயிரக் கணக்கான ஹரிஜனங்களுக்கு நம் ஸமயமானது ருசிகரமான நிலையை அளிக்கவில்லை. அடியேன் ஈண்டு ஹரிஜந ப்ரவேச இயக்கத்தவ னல்ல; தீவிர காங்கிரஸ் வாதியு மல்ல; ஓர் எளிய வைணவன் என்னும் நிலைமையிலேயே பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆயிரக் கணக்கான ஹரிஜனங்கள் நம் ஸமயத்தைக் கைவிட்டு அந்ய மதத்தில் புகுந்ததின் பயனாகச் சீரிய வாழ்க்கையும் உயர்ந்த நிலை பேறும் பெற்றனர். ஹரி ஜனமாகவே வாழ்ந்து வரும் மக்களுக்கு, ஸ்ரீ வைஷ்ணவன் சாஸ்த்ர நிஷித்த மல்லாத முறையில் தூய வாழ்க்கையும் உயர் நிலையுங் காட்டி, இம்மையிலும் மறுமையிலும் துணையாய் நிற்கக் கடப்பாடு உடைய னல்லனா? இழிந்த தெய்வங்களை வழிபட்டு, மிகவும் இழுக்குற்ற ஊணும் உடையும் எய்தி, வாழ்க்கையிலே சபிக்கப்பட்டவர்போல் உழலும் இம்மக்கள், புறச் சமயங்களைச் சாராது இன்னும் பல்லாயிரவர் நம் ஸமயத்தையே பேணி வருகின்றனரே! இது நம் மனத்தில் வியப்பையும் இரக்கத்தையும் வெட்கத்தையும் உண்டுபண்ண வில்லையா? இந்த மக்கள் இன்னும் சில நாட்களில் மெதுவாக மறைந்து விடுவரே! அப்படியாயின் இவர்பாற் சென்று, இவர்கட்கு நம் பாணநாதன் பரவின பற்பநாபனது வணக்கத்தைப் பரப்பி, இப் பல்லாயிர மக்களை நம்பால் நிலை நிறுத்திக் கொள்வதில் வைணவத்திற்கு அது ஒரு மாபெருங் கோட்டை யாகாதோ? வைதிக சிகாமணிகளே! உங்க ளடியில் தலைசாய்த்து வேண்டிக் கொள்கிறேன். சற்று யோசியுங்கள்.

நிற்க: க்ராமந்தோறும் நகரந்தோறும் கிரிஸ்தவ மிஷனரிகள் சர்ச்சுகளையும் மடாலயங்களையும் கட்டிப் பெருக்கி யிருக்கின்றனர். இழிவான வாழ்க்கையிலுள்ள ஹரிஜன மக்களைத் தம்பாற் சேர்த்து, அவர்க்குச் சீரிய வாழ்வும் சிறந்த எண்ணங்களையும் உண்டாக்கினர். கொசுவும் புழுக்களும் பிடுங்கித் தின்ற அவரது

12 JUL 194

சேரிகளை அழகிய ஊராக்கினர். கும்பி நீரைக் குடித்து மடிந்த அக்கூட்டத்திற்கு இனிய நீர்ப் பெருக்குள்ள கிணறுகளைக் கட்டிக் கொடுத்தனர். இருளடைந்து, பயங்கரமான பிசாசுகளைப் போற்றிய அவர் மனத்தில், கடவுளின் கருணை வடிவத்தைப் பதிப்பித்தனர். உலக வாழ்வில் கல்வியறிவு புகட்டி உயர்நிலை கொடுத்தனர். இவற்றை யெல்லாம் யார் செய்திருக்க வேண்டும்? ஸ்ரீ வைஷ்ணவ இளைஞரல்லவா? திருப்பாணாழ்வாரின் திருவடியை நினைத்து, அவர் பலம் கொண்டு சேரி தோறும் சீ வல்லபனது பெருமை ஒலிக்குமாறு செய்யவேண்டு மல்லவா? நம் கடமையைச் செய்தால் அவர்களைப் பார்த்து, 'ஈன்றோ ளிருக்க மணை நீராட்டி' என்றும், 'மற்றோர் புதுத் தெய்வம் தேறேன்மின்' என்றும் உரக்கப் பாடலா மல்லவா? ப்ராம்ஹணனென நிலைமையில் அவர்களைப் புறக்கணித்தோம். ப்ராம்ஹணனும் ஸ்ரீ வைஷ்ணவனுமான நிலைமையில் அங்ஙனம் யாம் ஸாங்க்ய புருஷன் போல, வாளா இருக்கப் போமோ? சொல்லுவீர். மிஷனரிகளின் வழிபாட்டு ஸ்தலங்கள் ஆயிரக் கணக்காய்க் கிளம்பிவிட்டன. மடாலயங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மத அறிவிலும் ப்ரசார ஆர்வத்திலும் சிறந்து வருடந்தோறும் வெளிக் கிளம்பி வருகிறார்கள். புறச்சமயிகளான இப்பல்லாயிரவர் சும்மா இருக்கிறார்களா? இருப்பாரா? அவர்கள் மதக்கோட்பாட்டின்படி சும்மா இருக்கலாமா? ஆக, அவர்களிடம் நம் ஜனங்கள் சென்று சேர்வதுடன், நம் மதத்தையே எதிர்ப்பதற்கு ஸந்ததியையும் உண்டுபண்ணுகிறார்கள். தவிர, மிஷனரிகளிடம் சிக்காத நம் மக்களைப்பற்றி யோசிப்போம். அந்ய மதத்திற் சேராவிடினும் அதில் ஓர் அன்பு ஜனித்து, நம் வைதிகரான பெரியோரிடமும் அவர் வழிபாட்டிலும் மதிப்பை வைக்கிறார்களில்லை. கோயிலில்லை. குளமில்லை. இப்படிப்பட்ட சூந்யநிலைக்கும் நாமே காரணம். ஆகையால் நாட்டில் ஒரு பெரு விழிப்புத் தோன்றி, நம் மடாலயங்களில் ஸித்தாந்தக் கல்வி பெருகிப் பல்லாயிரக் கணக்கில் ஸ்ரீ வைஷ்ணவர் கிளம்பித் தர்ம ஸம்ரக்ஷணம் செய்தால் ஸ்ரீ காந்தனுடைய திருவுள்ளங் குளிராதோ? 'கம்ஸ ராவணாதிகளாலும் அழிக்க முடியாத தர்மத்தை நாமா காப்பாற்றுகிறோம்' என்றால் அது பொருந்தாது. 'யதோ ரக்ஷதி ரக்ஷித꞉'. ஆகையால் நம் மடாலயங்கள் ஒன்று சேர்ந்து மனோ வாக்குக் காயங்களால் மாதவனுக்குத் தொண்டாற்ற ஆர்வங் கொண்ட ப்ரசாரகர்களை எழுப்பி, நாடும் நகரும் நமோ நாராயணா என்னுமாறும், 'மெல்ல எழுந்து அரியென்ற பேரரவம் உள்ளம் புகுந்து' யாவருக்கும் குளிருமாறும் செய்யவேண்டுமாய்ச் சீலமில்லாச் சிறியேன் தானும் தடக்கையுங் கூப்பி வேண்டுகிறேன். கருணையங் கடலாகிய ஸ்ரீ காந்தன் அங்ஙனமே அருள்வானாக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம꞉

கண்ணன் குழலூதற் சிறப்பு

[ஸ்ரீமதி கல்யாணி அம்மாள், சைதாப்பேட்டை]

[கண்ணன் வேய்ங்குழல் ஊதுவதைத் திருவாய்ப்பாடியி லுள்ளார் நேரில் கண்டு அநுபவித்தாற் போல், பெரியாழ்வார் பாவனை மிகுதியால் பாசுர ரூபமாய்ப் பேசி மகிழ்வதைப் பெண்களும் பேதைகளும் படித்துணருமாறு எளிய நடையில் எழுதலானேன். குற்றங் களைந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.]

கோமளம் — பெண்களே! கேட்டகளா இந்த ஆச்சரியத்தை. 'க்ருஷ்ணனே தீம்பன்; நம்ம பெண்களோ யுவதிகள்'னு அவாளவாளை அவா

ளவாள் பந்துக்கள் வெளியிலே வராதே கட்டிக் காப்பாத்தணம்னு உள்ளே விட்டுக் கதவையும் அடைச்சுண்டு வாசல்லே காவலாக இருந்திண்டிருந்தா. அந்தப் பெண்களை வரவழைக்கணம்னு, ஒரு ஸமயம் க்ருஷ்ணன் ஓரிடத்தில் இருந்துண்டு புல்லாங்குழல் ஊத ஆரம்பிச்சான். அந்த நாதம் அவாளை 'வாருங்கோ வாருங்கோ'ன்னு கூப்பிடறது போல அவா காதிலே விழுந்தது. விழுந்ததோ இல்லையோ! அவா ஸ்தநங்க ளெல்லாம் விம்மிப் போய், அவா வசத்தில் இல்லாமல், தங்க மநஸ்ஸையும் உடலையும் அவனிடத்திலேபறிகொடுத்திட்டு, காவல் காப்பவரையும் கடந்து, பூ மாலைகள் போல க்ருஷ்ணனண்டை வரிசையாய் வந்து நின்னுட்டா. என்ன ஆச்சரியம் பாருங்கடி. அந்த நாதம் என்ன இனிப்பா யிருக்கணம்னு பாத்துக்குங்கோ.

பெரியாழ்வார் திருமொழி 3-ம் பத்து, 6-ம் திருப்பதிகம்.

[1. நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர் களிதோ ரற்புதங் கேளீர்
தூவ லம்புரி யுடைய திருமால் தூய வாயிற் குழலோசை வழியே
கோவலர் சிறுமி யரிளங் கொங்கை குதுகு லிப்ப வுடலு ளவிழந் தெங்கும்
காவலுங் கடந்து கயிறு மாலை யாகி வந்து கவிழ்ந்துநின் றனரே.]

ஸுகுண— நான் கேட்டு அநுபவிச்சத்தைச் சொல்றேன் கேளுங்கடி. க்ருஷ்ணன் எப்படிப் புல்லாங்குழல் ஊதினன் தெரியுமோ? அதை முதல்லே சொல்றேன். இடப் பக்கத்துத் தாடையை இடத் தோளோடு சாய்ச்சுண்டான். புல்லாங்குழல்லே ரண்டு கைகளையும் சேத்து வைச்சுண்டான். புருவம் நெத்தியிலே ஏறும்படி நெறிச்சுண்டான். காத்தை வாயிலே ரொப்பிண்டு அதைக் குடமாட்டமா ஆக்கிண்டான். வாய் நுணியைக் குழலின் துளைக்குச் சரியா சின்ன தாக்கிண்டான். ஊத ஆரம்பிச்சான். அப்போ என்ன நேர்ந்தது தெரியுமோ? மானைப் போலவும் மயிலைப் போலவும் உள்ள பெண்கள் ளாம் இந்த நாதத்தைக் கேட்டு ஓடி வந்தா. வந்த விசையிலே அவா மயிர் முடியெல்லாம் அவிழ்ந்து போச்சு. அரையிலே உடுத்திண்டிருந்த புடவையெல்லாம் அவிழ்ந்து போச்சு. அதை ஒரு கையாலே பிடிச்சுண்டு, 'ஐயோ, காநத்தை இழந்துடப் போறோமே!'ன்னு அவஸரம் அவஸரமாய் க்ருஷ்ணனண்டை ஓடி வந்தா. ஆஹா! என்ன காநம்! என்ன அழகு! அதை நான் நன்ன கேட்டு அநுபவிச்சேண்டீ.

[2. இடவ ணரையிடத் தோளொடு சாய்த்து இருகை கூடப் புருவம் நெரிந்தேற
குடவ யிறுபடவாய்கடை கூடக் கோவிந்தன் குழல்கொ டூதின போது
மடமயில் களொடு மான்பிணை போலே மங்கை மார்கள் மலர்க்கூந்த லவிழ
உடைநெ கிழவோர் கையால் துகில்பற்றி யொல்கியோ டரிக்கணோடநின்
றனரே.]

மதுரம்—நான் பார்த்ததையும் கேட்டு அநுபவிச்சதையும் சொல்றேன். கேளுங்கோ. என் அப்பன் வைகுண்டநாதன்—வஸுதேவ புத்ரன்—மதுராபுரி மன்னன்— நந்தகோபன் குமரன்— ஆயர்குலக் கொழுந்து — என் கள்ள க்ருஷ்ணன், அழகா புல்லாங்குழலை வாயிலே வைச்சிண்டு ஊத ஆரம்பிச்சான். அப்போ என்ன நேர்ந்தது கேளு. அடீ ஸுகுண! நீ கொஞ்சம் முன்னே கண்ணன் குழலோசையைக் கேட்டு நம்ம பெண்கள்ளாம் காவலைக் கடந்து ஓடி வந்துட்டான்னுதானே சொன்னே. அது பெரிசன்னு; என் கண்ணுலே கண்டதைச் சொல்றேன். தேவலோகத்தி லிருக்கிற இளம் பெண்க ளெல்லாம் இந்த நாதத்தைக் கேட்டு ஓடி வந்துட்டா. நெஞ்சு நீர்ப்பண்டமா உருகின. கண்லே யிருந்து ஆநந்த பாஷ்பத்தைப் பெருக்கின. கூந்தல் அவிழ்ந்தது தெரியாமல் நெத்தி வேர்க்க வேர்க்கக் குழலோசையைக் காது கொடுத்து கேட்டுண்டே நின்னிண்டிருந்தா. இங்கே நீங்க ஒன்று கவனிக்கணும். தேவலோகத்தார்க்கு வேர்வை என்றது கிடையாது. தெரியுமோ யில்லையோ? இந்த காநத்தைக் கேட்டு அவாளுக்கும் வேர்வை யுண்டாச்சு. நான் பார்த்தேன். இதெல்

லாம் அந்த காநத்தின் ரஸமாக்கும். அவாளைக் கூட இந்தக் காந ரஸம் வேறு படுத்திடுத்து. அவா பரவசமாப் போய்ட்டா.

[3. வானிள வரசு வைகுந்தக் குட்டன் வாசுதேவன்மதுரை மன்னனந்த
கோனிள வரசு கோவலக் குட்டன் கோவிந்தன் குழல்கொ டூதினபோது
வானிளம் படியர் வந்துவந் தீண்டி மனமுருகி மலர்க் கண்கள் பனிப்ப
தேனளவு செறிகூந்த லவிழச் சென்னிவேர்ப் பச்செவி சேர்த்துநின் றனரே.]

கல்யாணி — அடீ பெண்களா! நான் அனுபவிச்சதையும் கொஞ்சம் சொல்றேன் கேளுங்கோ. தேனுகன் ப்ரலம்பன் காளியன் என்னும் இவாளை பயிரில் களை பிடுங்குவது போலப் பூண்டோடே ஒழிச்சு லோகத்துக்கு ஹிதத்தைப் பண்ணின நம்ம க்ருஷ்ணன் இருக்கானே - காட்டிலே நடையழகு தோனும்படி உலாத்திண்டே குழலை ஊத ஆரம்பிச்சான். அப்போ அவன் ஊதும் குழலோசையைக் கேட்டு அநுபவிக்கணும்னு, மேனகை திலோத்தமை ரம்பை ஊர்வசி என்ற அப்ஸரஸுக ளெல்லாம் ஓடி வந்தா. இவா ஆடலிலும் பாடலிலும் ப்ரஸித்தி பெத்தவா ளன்னு? இவா க்ருஷ்ணனுடைய நடையழகையும் குழலோசையையும் கண்ணாலும் காதாலும் பார்த்தும் கேட்டும் அநுபவிச்சா. 'ஐயோ, இவன் முன்னே நாம் ஆடிப் பாடித் திரியறமே! இது என்ன ஆட்டம் பாட்டம்!'னு வெக்கப்பட்டுண்டு மயங்கிப் போய், 'இனிமேல் பூமியி லாகட்டும் ஆகாசத்தி லாகட்டும் ஆடல் பாடல் என்றதை வாயாலேகூட சொல்லப்படாது'ன்னு நினைச்சுண்டு, ஆடலையும் பாடலையும் அடியோடே ஒழிச்சுட்டா. அவன் நடக்கச்சே, என்ன நடையழகு! தேனுட்டமா என்ன நாதம்! அந்த நடையழகை பார்க்கச்சே, "மால் விடையும் பொன்னுகமு நாகமு நாண நடந்தான்" என்ற கம்ப ராமாயண அடிகள் எனக்கு ஞாபகத்துக்கு வரதடீ. என்னாலே சொல்லி முடியாது அந்த அழகுகள், போ.

[4. தேனுகன் பிலம்பன் காளிய னென்னும் தீப்பப் பூடுக ளடங்க வுழக்கிக்
கான கம்படி யுலாவி யுலாவிக் கருஞ்சிறுக் கன்குழ லூதினபோது
மேன கையொடு திலோத்தமை யரம்பை யுருப்பசி யரவர் வெள்கி மயங்கி
வான கம்படியில் வாய்திறப் பின்றி யாடல் பாடலவை மாறினர் தாமே]

ஸுலோசநா—நான் அநுபவிச்சதைச் சொல்லணம் போல இருக்கடீ: கேளுங்கோ. முன்னொரு காலத்திலே நரசிங்க வடிவம் கொண்டான் நம் தேவகி சிங்கம்—க்ருஷ்ணன். கேட்டிருப்பையே. அவன் புல்லாங்குழலை ஊதினான். அப்போ அந்த ஓசை காதைப் பிடிச்சு இழுத்தது. தேவலோகத்திலே பாடகாள் தும்புரு நாரதர்ன்னு ரண்டுபேர். அவா வீணை வாசிக்கிறதிலே பேர் போனவா. அவா இந்தக் குழலோசையிலே ஈடுபட்டுப் போய், 'இவனோடு சரி சமானமா நாமும் வாசிக்கிறதா? நம்மாலே முடியுமா ?'ன்னு, தாங்கள் வீணை வாசிக்கிறதையே விட்டுட்டா. தவிர: கின்னரர்ன்னு ரட்டைப் பாடகாள். அவாளும் இந்தக் குழலோசையிலே ஈடுபட்டுப் போய், 'இனித் தங்கள் தங்கள் கின்னரத்தைத் தொடமாட்டோம்"னு அவளாட்டமா இவாளும் சபதம் பண்ணிண்டுட்டா. ஏண்டி! தேவதைகள் கதி இப்படி யாச்சுன்னு, மனுஷ்யா கதி கேக்கணமாடீ. எப்படி யிருந்திருக்கணம் அந்த கீத ரஸம்! யோசிச்சுக்கோ.

[முன்நர சிங்கம தாகி யவுணன் முக்கியத் தைமுடிப் பான்மூ வுலகில்
மன்ன ரஞ்சும்மது சூதனன் வாயிற் குழலி னோசைசெவி யைப்பற்றி வாங்க
நன்னரம் புடைய தும்புரு வோடு நாரதனும் தந்தம் வீணை மறந்து
கின்ன ரமிது னங்களும் தந்தங் கின்ன ரந்தொட கிலோமென் றனரே.]

[தொடரும்.]

மெள்ளத் தலையைத் தூக்கிக்கொண்டு 'தாதா! பசங்களெல்லாம் போய்விட்டார்கள். என்னாலிங்கு மூச்சுக்கூட விடமுடியவில்லை; இன்னும் சிறிதுநேரம் நானிங்கேயே இருந்தால் என் பிரிவினால் ஏங்கி எனது தாயார் என்னை எங்கும் தேடியலைவாள். தயவுசெய்து என்னை விட்டுவிடு'' என்று வேண்டினான்.

'இப்பொழுதே நாமிவனிடமிருந்து மோக்ஷத்தைப் பெறவேண்டும். இதுதான் சரியான சமயம்' என்றெண்ணிய அக்கிழவன், 'குழந்தாய்! கண்ணா! ஏன் விசாரப்படுகிறாய். சற்றுப் பொறு. நீ எல்லோருக்கும் ஏதோ ஒன்று கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். அதை எனக்கும் கொடுப்பாயாகில் உன்னை விட்டுவிடுகிறேன்' என்று கூறினான். இதைக் கேட்ட கண்ணனும் 'தாதா! நான் திநந்தோறும் வீடு வீடாகச் சென்று வெண்ணெய் முதலியவைகளைத் திருடி எனது நண்பர்களுக்குக் கொடுத்து வருவது உண்மையே. அது உனக்கு வேண்டுமானாலும் தருகிறேன். என்னை மாத்திரம் சற்று விட்டுவிடு. உனக்கு ஓர் நமஸ்காரம்' என்று பதிலளித்தான். கோனாரும் 'கண்ணா! எனக்குத் தயிரும் வேண்டாம் வெண்ணெயும் வேண்டாம்; உனக்கு வேண்டுமானாலும் நான் தருகிறேன். எனக்கு வேண்டியது மோக்ஷம் தான். அதை எனக்குக் கட்டாயம் நீ தரவேண்டும்' என்று வற்புறுத்தினான். கண்ணபிரான் 'தாதா! உன்னை யாரோ நன்றாக ஏமாற்றிவிட்டார்கள். நான் மிகச் சிறியவன். அதிலும் இடைக் குலத்தில் பிறந்தவன். மோக்ஷமோ மிகவும் உயர்ந்த பொருள். அதை நானெப்படிக் கொடுக்கமுடியும்? ஏன் என்னை இப்படியெல்லாம் வாட்டுகிறாய்? இன்னும் சற்றுநேரம் நானிங்கிருந்தால் என்னுடைய மூச்சே நின்று விடும்போலிருக்கிறது. உனக்குச் சற்று புண்ணியமுண்டு. வேறு எது வேண்டுமானாலும் கேள். தருகிறேன். இதிலிருந்துமாத்ரம் என்னை விட்டுவிடு' என்று கூறினான்.

எவ்வளவு சொல்லியும் கண்ணனுடைய வார்த்தைகளெல்லாம் அக்கிழவனுக்குப் பொய்யாகவே தோன்றிற்று. "கண்ணா! 'நீ எவ்வளவு சொன்னாலும் சரி. உன்னை இப்பொழுது விடப்போவதில்லை. நீயே ஸாக்ஷாத் நாராயணன். மோக்ஷமும் உன்னிடம்தானிருக்கிறது. எங்களைப் போன்றவர்களைக் காப்பாற்றுவதற்கென்றே நீ இக்கோலத்துடனிங்கு வந்திருக்கிறாய் என்றெல்லாம் எனக்கு நாரதர் சொல்லியிருக்கிறார். அவர் ஒருகாலும் பொய் சொல்லமாட்டார். எனக்கு மோக்ஷம் கொடுத்துத்தானாகவேண்டும்' என்று பிடிவாதமாக அக்கிழவன் சொல்லிவிட்டான். கண்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'இவன் நம்மிடம் த்ருடமான பக்தி கொண்டவன். இவனை நம்மாலினி ஏமாற்ற முடியாது' என்றெண்ணி, கண்ணபிரான் 'தாதா! அப்படியே ஆகட்டும். இனியாவது என்னை விட்டுவிடு' என்று சொன்னான். இவ்வளவு சொல்லியும் த்ருப்தியடையாத அக் குருட்டுக் கிழவன், 'உன்னை இப்பானையல்லவா மறைத்துக் காப்பாற்றிற்று? ஆகவே இதற்கும் மோக்ஷம் தந்தருளவேண்டும்' என்று கேட்கக் கண்ணனும் அப்படியே ஆகட்டுமென்றான். மறுபடியும் 'ஆமாம் கண்ணா! வெகுகாலமாக இந்தத் தடி என்னை விட்டுப் பிரியாமல் இருக்கிறது. இதைத் தனியாக விட்டு நான்மாத்ரம் எப்படி மோக்ஷம் செல்வது?' என்று கேட்க 'நீ கேட்பதெல்லாம் தந்தேன்' என்று கூறினான் கண்ணன். பகவானிடத்தில் செய்யும் விண்ணப்பமும் வீணாகுமோ! அக்கிழவன் கண்ணனைத் தயிர்ப் பானையிலிருந்து விடுவிக்க அவனும் ஸந்தோஷமாக வீடு சென்றான்.

தயிர்ப் பானையை ஸாதனமாகக்கொண்டு கோனார் என்பவன் மோக்ஷத்தை யடைந்தபடியால், அன்றுமுதல் அவனுக்கு ததிபாண்டனென்றே பெயர் விளங்கி வருகிறது.

अध्यात्मञ्चैव प्राणस्य विज्ञायामृतमश्नुते ।
विज्ञायामृतमश्नुत इति ॥ १२ ॥

इति तृतीयः प्रश्नः ॥

யையும் [பரமாத்மாவிடமிருந்து உத்பத்தியை அடைகின்றது என்பதையும்], **आयतिम्** - [மநஸ்ஸுடன் கூடச்] சேர்வதையும், **स्थानम्** [ஶரீரத்தில் பாயு உபஸ்தம் முதலான இடங்களில்] இருப்பதையும், **विभुत्वम्** - [சக்ரவர்த்தி மாதிரியாக இருந்துகொண்டு ஐந்துவித ப்ராணாபானம் முதலியவைகளை நியமிக்கும்] ஸ்வாம்யத்தையும், **अध्यात्मम्** - தேஹத்தில் [ஐந்து விதமாகப் பிரிந்து] நிற்பதையும், **च** - [இது மற்றொன்றையும் ஸமுச்சயிக்கின்றது. அதாவது: ஆதித்யன் முதலான ரூபத்துடன் வெளியில் நிற்பதையும்], **विज्ञाय** - அறிந்து [அறிந்தும் உபாஸித்தும்], **अमृतम् अश्नुते** - மோக்ஷத்தை அடைகிறான். இரண்டு ஆவ்ருத்தி சொல்வது ப்ரஶ்நத்தின் முடிவைக் காண்பிக்கின்றது.

மூன்றாவது ப்ரஶ்நம் முற்றிற்று.

॥ श्रीः ॥

॥ प्रश्नोपनिषत् ॥

॥ चतुर्थः प्रश्नः ॥

हरिः ओम्। अथ हैनं सौर्यायणी गार्ग्यः पप्रच्छ। "भगवन्नेतस्मिन् पुरुषे कानि स्वपन्ति? कान्यस्मिन् जाग्रति? कतर एष देवः स्वप्नान् पश्यति? कस्यैतत्सुखं भवति? कस्मिन्नु सर्वे संप्रतिष्ठिता भवन्ति?" इति ॥ १ ॥

ஸ்ரீ:

நான்காவது ப்ரஶ்நம்

கீழ் ப்ரஶ்நத்தில், ஜீவாத்மாவானது ப்ராணனைக் காட்டிலும் வேறுபட்டது என்பது விளக்கப்பட்டது. இந்த ப்ரஶ்நத்தில் ஸ்வப்ந ஸுஷுப்தி தஶைகளை வர்ணிப்பதன் த்வாரா, இந்த்ரியங்களெல்லாம் ஸ்வப்ந தஶையில் உபஶாந்தியை அடைகின்றனவென்றும், ப்ராணன் மாத்ரம் அப்பொழுது ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறதென்றும், ஸுஷுப்தி காலத்தில் ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் ஸம்பத்தியை அடைகிறானென்றும் இத்யாதியான விஷயங்களை விளக்குகிறார். இதிலிருந்தும் ஜீவாத்ம பரமாத்மாக்களின் வைலக்ஷண்யம் வெளிப்படுகின்றது. அதுதான் உத்தேஶ்யம்.

[ப-ரை.] **अथ** - பிறகு, **एनम्** - இவரை [பிப்பலாதரை], **गार्ग्यः सौर्यायणी** - கார்க்க கோத்ரோத்பவரான ஸௌர்யாயணீ என்பவர், **पप्रच्छ** கேட்டார். "**भगवन्** - ஹே, ஸ்வாமியே! **एतस्मिन् पुरुषे** - இந்த ஜீவாத்மாவானது, [**सुप्ते सति** - தூங்கும்பொழுது], **कानि स्वपन्ति** - எவை தூங்குகின்றன? **अस्मिन्** [**सुप्ते सति**] - இவன் தூங்கும்பொழுது, **कानि जाग्रति** எவை விழித்துக்கொண்டிருக்கின்றன? **एष देवः** - இந்த ஜீவன் [ப்ரகாஶம் முதலிய குணங்களுடன் கூடியிருப்பதால் ஜீவாத்மா தேவனென்று பேசப்படுகின்றது], **कतरः** - எப்படி இருந்துகொண்டு, **स्वप्नान्** - ஸ்வப்நத்தில் காணப்படும் ரதம் முதலிய பொருள்களை, **पश्यति** - பார்க்கிறான்? **एतत्सुखम्** - இந்த ஸுகமெல்லாம் [விஷயாநுபவத்தால் உண்டாகும் ஸுகம்], **कस्य** - எதற்காக, **भवति** - உண்டாகின்றது? **सर्वे** - இவையெல்லாம், **कस्मिन्** - எதில், **संप्रतिष्ठिता भवन्ति** - நிலைபெற்று நிற்கின்றன?" **इति** - என்று [கேட்டான்].

तस्मै स होवाच । "यथा गार्ग्य मरीचयोऽर्कस्यास्तं गच्छतः सर्वा एतस्मिंस्तेजोमण्डल एकीभवन्ति, ताः पुनःपुनरुदयतः प्रचरन्ति, एवं ह वै तत्सर्वं परे देवे मनस्येकीभवति । तेन तर्ह्येष पुरुषो न शृणोति, न पश्यति, न जिघ्रति, न रसयते, न स्पृशते, नाभिवदते, नादत्ते, नानन्दयते, न विसृजते, नेयायते ; स्वपितीत्याचक्षते ॥ २ ॥

प्राणाग्नय एवैतस्मिन् पुरे जाग्रति । गार्हपत्यो ह वा एषोऽपानः, व्यानो-

---

2, [ப-ரை] **सः** - அவர் [பிப்பலாதர்], **तस्मै**-அந்த ஸௌர்யாயணிக்கு, **उवाच** - [ஸமாதானம்] சொன்னார். "**गार्ग्य** - ஹே கார்க்யரே! **अस्तं गच्छतः अर्कस्य** - அஸ்தமநம் அடையும் ஸூர்யனுடைய, **सर्वाः मरीचयः** - கிரணங்களெல்லாம், **यथा** - எப்படி, **एतस्मिन् तेजोमण्डले** - இந்த ஸூர்ய மண்டலத்தில், **एकीभवन्ति** - ஒன்றாகி விடுகின்றனவோ [மண்டலத்தினுள் அடங்கிவிடுகின்றனவோ], **ताः पुनः पुनः उदयतः** - அந்தக் கிரணங்களே மறுபடியும் உதயமாகும் [அந்த ஸூர்யனிடமிருந்தே], **प्रचरन्ति** - வெளிவந்து [நாலு பக்கங்களிலும்] ப்ரஸரிக்கின்றனவோ, **एवं ह वै** - அம்மாதிரியே, **तत्सर्वं** - அதெல்லாம் [அந்த இந்த்ரியக் கூட்டம் முழுவதும்], **परे देवे** - [இந்த்ரியங்களைக் காட்டிலும்] உத்க்ருஷ்டமானதாகவும் ப்ரகாசத்துடனும் கூடியிருப்பதால் 'தேவன்' என்று சொல்லக் கூடிய [மநஸ்ஸில்], **एकीभवति** - ஒன்றாகிவிடுகின்றது. [தங்கள் தங்கள் வ்யாபாரங்களைச் செய்ய ஶக்தியற்றவையாகப் பண்ணும் ஒருவிதமான சேர்க்கையை அடைகின்றது]. **तेन तर्हि** அந்தக் காரணத்தாலன்றோ, **एष पुरुषः**-இந்த ஜீவன் [தூங்கும் தசையில்], **न शृणोति** - கேட்கிறானில்லை; **न पश्यति** - பார்க்கிறானில்லை; **न जिघ्रति** - முகருகிறானில்லை; **न रसयते**-ருசி அறிகிறானில்லை; **न स्पृशते**-தொடுகிறானில்லை; **न अभिवदति**-பேசுகிறானில்லை; **न आदत्ते** [கைநீட்டி] வாங்குகிறானில்லை; **न आनन्दयते**-வேறு [வைஷயிக] ஸுகம் ஒன்றையும் அநுபவிக்கிறானில்லை; **न विसृजते** - விஸர்க்கம் முதலியவைகளைச் செய்கிறானில்லை; **न ईयायते** - நடக்கிறானில்லை, **स्वपितीति आचक्षत्ते** -[அவன்] தூங்குகிறான் என்று மாத்ரம் சொல்லுகிறார்கள். [இவ்விடத்தில் த்ருஷ்டாந்தத்தில் ஸூர்யகிரணங்கள் அடங்குவதையும் பிறகு வெளிப்படுவதையும் பற்றி ப்ரஸ்தாவித்திருந்தாலும், தார்ஷ்டாந்திகத்தில் இந்த்ரியங்கள் அடங்குவது மாத்ரமே பேசப்படுகின்றது; மறுபடியும் தூங்கி எழுந்தவுடன் இந்த்ரியங்களெல்லாம், ஸூர்யன் உதயமாகும்பொழுது கிரணங்கள் வெளிப்படுவனபோல் வெளிவந்து தங்கள் தங்கள் வ்யாபாரங்களில் ப்ரவர்த்திக்கின்றன என்பதும் விவக்ஷிதம்].

---

3 - 4. நாம் தூங்கும் காலத்தில் எவை விழித்துக்கொண்டிருக்கின்றன வென்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறார்.

ऽन्वाहार्यपचनो यद्गार्हपत्यात् प्रणीयते प्रणयनादाहवनीयः प्राणः ॥ ३ ॥

यदुच्छ्वासनिश्श्वासावेतावाहुती । समं नयतीति स समानः । मनो ह वाव यजमानः । इष्टफलमेवोदानः ; स एनं यजमानमहरहर्ब्रह्म गमयति ॥ ४ ॥

[ப - ரை] **प्राणाग्नय एव** - ப்ராணன் முதலிய அக்நிகள் மாத்ரம் [இவ்விடத்தில் ப்ராணாபாநம் முதலியவைகளின் அநுஸந்தாநத்தை ஒரு அக்நிஹோத்ரத்திற்கு ஸமாநமாகப் பேசுகிறபடியால், ப்ராணாக்நி என்னும் வ்யவஹாரம் உபபந்நம்]. **एतस्मिन् पुरे** - இந்த [ஶரீரமாகிற] பட்டணத்தில், **जाग्रति** - விழித்துக்கொண்டிருக்கின்றன. **एष अपानः** அபாநமென்னும் இந்த வாயு, **गार्हपत्यः** - கார்ஹபத்யாக்நி ; **व्यानः** - வ்யாந என்னும் வாயு, **अन्वाहर्यपचनः** - அந்வாஹார்ய பசந மென்று சொல்லப்படும் தக்ஷிணாக்நி ; **प्राणः** - ப்ராணன் என்னும் வாயு, **यद्गार्हपत्यात् प्रणीयते** - கார்ஹபத்யாக்நியிலிருந்து ப்ரணயநம் செய்யப்படுகின்றது என்னும், **प्रणयनात्** - ப்ரணயந காரணத்தால், **आहवनीयः** - ஆஹவநீயாக்நி ஆகின்றது ; **यत् एतौ उच्छ्वासनिश्श्वासौ** - உச்வாஸம் நிஶ்வாஸம் என்று சொல்லப்படும் இரண்டு மூச்சுக்களும், **आहुती** - இரண்டு ஆஹுதி கள் ; **समानः** - ஸமாநம் என்னும் வாயு, **समं नयति इति** - [அந்த ஆஹுதிகளாகிற உச்வாஸ நிஶ்வாஸங்களைப் பிரித்து] ஸமமாகச் செய்கிற படியால், **सः**-அவன் [அக்நிஹோத்ரத்தின்ஒரு அவயவமாகிற அத்வர்யு]; **मनः** - மநஸ்ஸானது, **यजमानः** - [அக்நிஹோத்ரம் செய்யும்] யஜமாநன்; **उदानः** - உதாநமானது, **इष्टफलम्** - [செய்யப்படும் அக்நிஹோத்ரமாகிற] கர்மத்தின் பலம். **सः** - அது [அந்தஉதாநம் என்னும் வாயு], **एनम्** - இவனை [மநஸ்ஸாகிற இந்த யஜமாநனை], **अहरहः** - ஒவ்வொரு திநத்திலும் [தூங்கும் காலத்தில்], **ब्रह्म** - பரமாத்மாவிடம், **गमयति** - கொண்டு போய் விடுகிறது.

அக்நிஹோத்ரத்திற்கு எட்டு அவயவங்கள் உண்டு: அவையாவன :- கார்ஹபத்ய ஆஹவநீய தக்ஷிண என்னும் மூன்று அக்நிகள், இரண்டு ஆஹுதிகள், அத்வர்யு, யஜமாநன், கர்மபலம் ஆக எட்டு. இந்த ப்ராணாக்நி ஹோத்ரத்தில், அபாநம் கார்ஹபத்யாக்நி; ப்ராணன் ஆஹவநீயாக்நி; வ்யாநம் தக்ஷிணாக்நி; உச்வாஸ நிஶ்வாஸங்கள் இரண்டும் இரண்டு ஆஹுதிகள்; ஸமாநம் அத்வர்யு; மநஸ் யஜமாநன்; உதாநம் கர்மபலம்.

மற்றும் ஒரு விஷயம் இவ்விடத்தில் கவனிக்கவேண்டியது உண்டு. அதாவது: இவ்விடத்தில் **'एनं ब्रह्म गमयति'** [மநஸ் ப்ரஹ்மத்தினிடத்தில் கொண்டுபோய் விடப்படுகின்றது] என்று மநஸ்ஸுக்கு ப்ரஹ்ம கமநம் சொல்லப்படுகின்றது. வேறு உபநிஷத்துக்களில் 'ப்ரஹ்மத்தினிடம் நயிப்பிக்கப்படுகிறவன் ஜீவனே' என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். ஜீவனுக்கு ப்ரஹ்ம கமநம் சொல்வதே உபபந்ந

अत्रैष देवः स्वप्ने महिमानमनुभवति। यद्दृष्टं दृष्टमनुपश्यति, श्रुतं श्रुतमेवार्थमनुश‍ृणोति, देशदिगन्तरैश्च प्रत्यनुभूतं पुनः पुनः प्रत्यनुभवति। दृष्टञ्चादृष्टञ्च श्रुतञ्चाश्रुतञ्चानुभूतञ्चाननुभूतञ्च सर्वं पश्यति सर्वः पश्यति ॥ ५ ॥

மாதலால், இவ்விடத்தில் மநஸ்ஸுக்குச் சொல்லப்பட்டிருக்கும் ப்ரஹ்ம கமநத்தை வேறுவிதமாக நயிப்பிப்பது உசிதமாகுமென்று எண்ணிப் பாஷ்யகாரர்கள், மநஸ்ஸுக்குப் புரீதத் என்னும் நாடீ பர்யந்தம் கமநத்தை எல்லா உபநிஷத்துக்களும் சொல்லுகிறபடியால், அதை ப்ரஹ்ம கமநத்திற்கு ஸமாநமாகப் பேசுவது உபபந்நமென்று நிர்வஹித்திருக்கிறார்கள்.

---

5. 'இந்த ஜீவன் எப்படி இருந்துகொண்டு ஸ்வாப்ந வஸ்துக்களைப் பார்க்கிறான்?' என்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லப்படுகிறது.

[ப - ரை] **अत्र** - இந்த ஸமயத்தில், **एष देवः** - இந்த ஜீவன், **स्वप्ने** - ஸ்வப்நத்தில், **महिमानम्** - பெருமையை [யானை குதிரை முதலியவைகளைப் பார்க்கும் பெருமையை], **अनुभवति** - பார்க்கிறான் [பார்த்து அநுபவிக்கிறான்]. **यत् दृष्टं** - எது [ஜாக்ரத்தசையில்] திரும்பித்திரும்பிப் பார்க்கப்பட்டதோ, [**तदेव**] **अनुपश्यति** - அதையே மறுபடியும் பார்க்கிறான். **श्रुतं श्रुतमेव अर्थं अनुश‍ृणोति** - எது கேட்கப்பட்டதோ அதையே கேட்கிறான். **देशदिगन्तरैश्च** - வேறு ஸ்தலங்களிலும் வேறு திக்குக்களிலும், **पुनः पुनः प्रत्यनुभूतम्** - திரும்பத் திரும்ப எது அநுபவிக்கப்பட்டதோ, [**तदेव** - அதையே], **प्रत्यनुभवति**- மறுபடியும் அநுபவிக்கிறான். [இதுமாத்ர மில்லை], **दृष्टं च अदृष्टंच** - [ஏற்கெனவே] பார்க்கப்பட்டதும் [இதுபர்யந்தம்] பார்க்கப்படாததும், **श्रुतंचाश्रुतंच** - கேட்கப்பட்டதும் கேட்கப்படாததும், **अनुभूतंचाननुभूतं च**-அநுபவிக்கப்பட்டதும் அநுபவிக்கப்படாததும், **सर्वम्**-எல்லாவற்றையும், **पश्यति** - பார்க்கிறான்; **सर्वः**[**सन्**] எல்லாமாக இருந்துகொண்டு [த்ரஷ்டாவாகவும் ஶ்ரோதாவாகவும் கந்தாவாகவும் இப்படியெல்லாம் இருந்துகொண்டு], **पश्यति**-பார்க்கிறான். [அதாவது: பார்க்கிறவனாகவும் கேட்கிறவனாகவும் அநுபவிக்கிறவனாகவும், இப்படி வெவ்வேறு அவஸ்தையை அடைந்தவனாய் இருந்துகொண்டு அநுபவிக்கிறான்.] நித்ரையில் இந்தத் தேஹத்தை ஆஶ்ரயித்திருக்கும் இந்த்ரியம் முதலியவையெல்லாம் உபரதங்களாக இருந்தும், ஸ்வப்ந காலத்தில் பகவானால் இவனுடைய அநுபவத்திற்காகத் தாத்காலிகமாக ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள இந்த்ரியம் முதலியவைகளைக் கொண்டு இவன் இம்மாதிரி அநுபவங்களை அநுபவிக்கிறான். இதுதான் இம்மந்த்ரத்தின் கருத்து.

स यदा तेजसाऽभिभूतो भवति, अत्रैष देवस्स्वप्नान्न पश्यति। अथ तदेतस्मिन् शरीरे एतत्सुखं भवति ॥ ६ ॥

स यथा सोम्य वयांसि वासोवृक्षं संप्रतिष्ठन्ते, एवं ह वै तत्सर्वं पर आत्मनि संप्रतिष्ठते ॥ ७ ॥

---

6. ஸ்வப்நாவஸ்தை வர்ணிக்கப்பட்டது. இனி ஸுஷுப்தி அவஸ்தை எப்படிப்பட்டதென்று விவரிக்கப்படுகின்றது. ஸுஷுப்தியில் இந்த்ரியங்கள் மாத்ரமின்றிக்கே மநஸ்ஸும் உபரதியை அடைகின்றது. ஸ்வப்நாவஸ்தையில் அநுபவிக்கப்பட்டவை ஒன்றும் ஸுஷுப்தியில் அநுபவிக்கப்படுகிறதில்லை; இப்பொழுது ஜீவன் பரமாத்மாவுடன் ஸம்பத்தியை அதாவது: ஒருவித ஸம்ஶ்லேஷத்தைப் பெறுகிறான். அவனுக்கு ஜ்ஞாநம் அதிமாத்ரம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால்அந்த ஸம்ஶ்லேஷத்தை அவன் உணர்கிறா னில்லை.

[ப - ரை.] **सः** - அவன் [அந்த ஜீவன்], **यदा** - எப்பொழுது, **तेजसा** - தேஜஸ் என்னும் ஶப்தத்தால் சொல்லப்படும் பரமாத்மாவுடன், **अभिभूतो भवति** - ஸம்பந்நனாக ஆகிறானோ, **अत्र** - அவ்விடத்தில் [அதாவது: அந்த ஸுஷுப்தி அவஸ்தையில்], **एष देवः** - இந்த ஜீவன், **स्वप्नान्** - ஸ்வாப்ந பதார்த்தங்களை, **न पश्यति** - பார்க்கிறா னில்லை. [இதனால், 'எவன் ஸ்வப்ந பதார்த்தங்களைப் பார்க்கிறான்' என்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லப்பட்டதாகின்றது. 'இந்த ஜீவனே அவைகளைப் பார்க்கிறான்; ஆனால், அது ஸ்வப்நாவஸ்தையில் மாத்ரம் உண்டு என்று விளக்கப்பட்டதாயிற்று. இனி 'யாருக்கு இந்த ஸுகம்?' என்பதற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது.] **यदेतत्सुखं भवति** - ஸுகமென்று யாதொன்று ஸம்பவிக்கின்றதோ, **तदेतस्मिन् शरीरे** - அந்த ஸுகம் இந்த ஶரீரம் இருக்கும்போதுதான். [அதாவது: ஶரீரமே விஷய ஸம்பந்தத்தால் ஏற்படும் ஸுகங்களுக்கு ஹேதுவென்று சொல்லப்பட்டதாகிறது.]

---

7. 'இவையெல்லாம் எதில் ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றன?' என்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது.

[ப - ரை.] **सोम्य** - ஹே ஸௌம்ய! **यथा** - எப்படி, **वयांसि** - பக்ஷிகள், **वासोवृक्षम्** - தாங்கள் வஸிக்கும் வ்ருக்ஷத்தைக் குறித்து, **संप्रतिष्ठन्ते** - ப்ரதிஷ்டை பெறுவதற்குப் போகின்றனவோ, **सः** - இது தான் த்ருஷ்டாந்தம்; **एवम्** - அப்படியே, **तत्सर्वम्** - இவையெல்லாம், **परे आत्मनि** - பரமாத்மாவினிடத்தில், **संप्रतिष्ठते** - ப்ரதிஷ்டை பெற்று நிற்கின்றது.

पृथिवी च पृथिवीमात्रा च, आपश्चापोमात्रा च, तेजश्च तेजोमात्रा च, वायुश्च वायुमात्रा च, आकाशश्चाकाशमात्रा च, चक्षुश्च द्रष्टव्यश्च, श्रोत्रश्च श्रोतव्यश्च, घ्राणश्च घ्रातव्यश्च, रसश्च रसयितव्यश्च, त्वक्च स्पर्शयितव्यश्च, वाक्च वक्तव्यश्च, हस्तौ चादातव्यश्च, उपस्थश्चानन्दयितव्यश्च, पायुश्च विसर्जयितव्यश्च, पादौ च गन्तव्यश्च, मनश्च मन्तव्यश्च, बुद्धिश्च बोद्धव्यश्च, अहङ्कारश्चाहङ्कर्तव्यश्च, चित्तश्च चेतयितव्यश्च, तेजश्च विद्योतयितव्यश्च, प्राणश्च विधारयितव्यश्च ॥ ८॥

एष हि द्रष्टा स्प्रष्टा श्रोता घ्राता रसयिता मन्ता बोद्धा कर्ता विज्ञानात्मा पुरुषः । स परेऽक्षरे आत्मनि संप्रतिष्ठते ॥ ९ ॥

---

8. 'இவையெல்லாம்' என்பதால் குறிக்கப்படுமவைகள் இவ்விடத்தில் விவரிக்கப்படுகின்றன.

[ப-ரை.] **पृथिवी च** - பூமியும், **पृथिवीमात्रा च** - பூமியாக மாறுவதற்கு முன்னதாக அதற்கு இருந்த அவஸ்தையும், [புராணங்களில் ப்ருதிவீ தந்மாத்ரை, தேஜஸ் தந்மாத்ரை, இவ்வாறு 'தந்மாத்ரை'களென்று வ்யவஹரிக்கப்படுமவையெல்லாம், அவையவைகளின் பூர்வாவஸ்தையையே குறிக்கின்றன.] **आपश्च** - ஜலமும், **आपोमात्रा च** - அதன் பூர்வாவஸ்தையும், **तेजश्च तेजोमात्रा च** - தேஜஸ்ஸும் அதன் பூர்வாவஸ்தையும், **वायुश्च वायुमात्रा च** - வாயுவும் அதன் பூர்வாவஸ்தையும், **आकाशश्च आकाशमात्रा च** - ஆகாஶமும் அதன் பூர்வாவஸ்தையும், **चक्षुश्च द्रष्टव्यश्च** - கண்ணும் அதனால் பார்க்கப்படத் தகுந்தவைகளும், **श्रोत्रश्च श्रोतव्यश्च** - காதும் அதனால் கேட்கப்படத் தகுந்தவைகளும், **घ्राणश्च घ्रातव्यश्च** - மூக்கும் அதனால் முகரப்படத் தகுந்தவைகளும், **रसश्च रसयितव्यश्च** - நாக்கும் அதனால் ருசிக்கப்படத் தகுந்தவைகளும், **त्वक्च स्पर्शयितव्यश्च** - தோலும் அதனால் ஸ்பர்ஶிக்கத் தகுந்தவைகளும், **वाक्च वक्तव्यश्च** - வாக்கும் அதனால் வ்யவஹரிக்கத் தகுந்தவைகளும், **हस्तौ च आदातव्यश्च** - கைகளும் அவைகளால் வாங்கத் தகுந்தவைகளும், **उपस्थश्च आनन्दयितव्यश्च**- உபஸ்தமென்னும் அவயவமும் அதனால் ஆநந்திக்கத் தகுந்தவைகளும், **पायुश्च विसर्जयितव्यश्च** - பாயு என்னும் அவயவமும் அதன் வழியாக வெளிப்படுத்தத் தகுந்தவைகளும், **पादौ च गन्तव्यश्च** - கால்களும் அவற்றால் நடக்கத் தகுந்தவைகளும், **मनश्च मन्तव्यश्च** - மநஸ்ஸும் அதனால் நினைக்கத்தகுந்தவைகளும், **बुद्धिश्च बोद्धव्यश्च** - புத்தியும் அதனால் அறியப்படத் தகுந்தவைகளும், **अहङ्कारश्च अहङ्कर्तव्यश्च** - அஹங்காரமும் அதற்கு லக்ஷ்யமாக இருக்குமவைகளும், **चित्तश्च चेतयितव्यश्च** - சித்தமும் அதனால் உணரத் தகுந்தவைகளும், **तेजश्च विद्योतयितव्यश्च** - தேஜஸ்ஸும் அதனால் ப்ரகாஶிக்கப்படத் தகுந்தவைகளும், **प्राणश्च विधारयितव्यश्च** - ப்ராணனும் அதனால் தரிக்கப்படத் தகுந்தவைகளும் [இவையெல்லாம் பரமாத்மாவினிடத்திலேயே ப்ரதிஷ்டிதங்களாக இருக்கின்றன.]

---

9. ஜகத்தில் சேதந வஸ்துக்களென்றும் அசேதநங்களென்றும், கர்த்தாவென்றும் கரணமென்றும் கர்மாவென்றும் வ்யவஹரிக்கப்படுமவையெல்லாம், [அதாவது ப்ரபஞ்சம் முழுவதும்] பரமாத்மாவை ஆஶ்ரயித்தே நிற்கின்றது என்று வ்யவஹரிக்கப்படுகின்றது.

स यो ह वै तदच्छायमशरीरमलोहितं शुभ्रमक्षरं वेदयते यस्तु सोम्य । स सर्वज्ञस्सर्वीभवति । तदेष श्लोकः ॥ १० ॥

विज्ञानात्मा सह देवैश्च सर्वैः प्राणा भूतानि संप्रतिष्ठन्ति यत्र ।
तदक्षरं वेदयते यस्तु सोम्य स सर्वज्ञस्सर्वमेवाविवेश ॥ इति ॥

॥ चतुर्थः प्रश्नः ॥

[ப - ரை] **एष हि** - இந்த ஜீவனே, **द्रष्टा** - பார்க்கிறவன், **स्प्रष्टा** - ஸ்பர்ஶிக்கிறவன், **श्रोता** - கேட்கிறவன், **घ्राता** - முகருகிறவன், **रसयिता** - ருசி அறிகிறவன், **मन्ता** - எண்ணுகிறவன், **बोद्धा** - அறிகிறவன், **कर्ता** - செய்கிறவன், **विज्ञानात्मा पुरुषः** - ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடைய புருஷன், **सः** - அவன், **परे अक्षरे आत्मनि** - ஸர்வோத்க்ருஷ்டனும் விகாரமற்றவனும் இருக்கும் பரமாத்மாவினிடத்தில், **संप्रतिष्ठते** - ப்ரதிஷ்டை பெற்று இருக்கிறான். [தார்க்கிகர்கள் ஆத்ம வஸ்துவானது அறியும் தர்மத்தை உடையதே யன்றி, அதன் ஸ்வரூபம் ஜ்ஞாநமன்று என்று சொல்லுகிறார்கள்; ஶாங்கரர்கள், அது ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையதே யன்றி, அது அறியும் தர்மத்தை உடையதன்று என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இருவருக்கும் இந்த ஶ்ருதி வாக்யம் விரோதிக்கின்றது. ஏனென்றால்: இதில், ஜீவன் ஜ்ஞாதா (அறிகிறவன்) என்றும் 'விஜ்ஞாநாத்மா' (ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையவன்) என்றும் இரண்டு ஆதாரங்களும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவன்றோ?

---

10. கீழ்ச் சொல்லப்பட்ட விஷயமே இன்னும் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **स यो ह वै** - எவன் ஒருவன், **तत्** - அந்தப் பரமாத்ம வஸ்துவை, **अच्छायम्** - நிழலற்றவனென்றும் [அதாவது : ஜ்ஞாநத்திற்குக் குறைவைச்செய்யக்கூடிய கர்மமற்றவனென்றும்], **अशरीरम्** - [கர்மத்தால் ஏற்படும்] ஶரீரமற்றவனென்றும், **अलोहितम्** - [கர்ம க்ருத] ரூபமற்றவனென்றும், **शुभ्रम्** ஸ்வயம்ப்ரகாஶனென்றும், **अक्षरम्** - மாறுதல் முதலியவை யற்றவனென்றும், **वेदयते** - அறிகிறானோ, **सः** - அவன், **सर्वज्ञः** - எல்லா மறிந்தவன், **सर्वीभवति** - ஸர்வ காமங்களையும் அநுபவிக்கிறவனாகிறான். **तदेष लोकः** - அப்படிப்பட்ட பரமாத்மாவைக் குறித்து ஒரு ஶ்லோகமும் உண்டு.

---

11. [ப - ரை.] **विज्ञानात्मा** - ஜ்ஞாந ஸ்வரூபனாகிற ஜீவனும், **सर्वैर्देवैस्सह** - வாக் முதலிய ஸகல இந்த்ரியங்களும், **प्राणाः** - முக்ய ப்ராணனும், **भूतानि** - மஹாபூதங்களும், **यत्र** - எந்தப் பரமாத்மாவினிடத்தில், **संप्रतिष्ठन्ति** - ப்ரதிஷ்டை பெற்று நிற்கின்றனவோ, **तदक्षरम्** - அந்த நிர்விகாரமான பரமாத்மாவை, **यो वेदयते**-எவன் அறிகிறானோ, **सोम्य** - ஹே ஸோபநமான பார்வையை உடையவனே, **सः** - அவன், **सर्वज्ञः** - எல்லாவற்றையும் அறிந்தவனாகிறான்; **सर्वमेव आविवेश** - ஸகலமான பதார்த்தங்களையும் ப்ரவிஷ்டனாக ஆகிறான். அதாவது: எல்லா லோகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஶக்தி வாய்ந்தவனாகிறான். "**कामचारी कामरूप्यनुसञ्चरन्**" என்று மற்றொரு ஶ்ருதியும் பேசுகின்றது.

நான்காம் ப்ரஶ்நம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன் என்று திருநாமம் பூண்ட
ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமியின் ஜீவித சரித்ரம்

ஸ்ரீமதநந்தமான கல்யாண குணத்திற்கு இருப்பிடமாயும் மஹா சாந்த ஸ்வரூபியுமான இந்த ஸ்வாமி, ஸ்ரீ ராஜகோபாலார்ய மஹாதேசிகன் என்னும் திருநாமம் பூண்டு, ஸ்ரீமத் கருடபுரம் என்று புகழ்பெற்ற அபிஜாத ஸ்ரீ க்ராமத்தில், நடந்த ப்ரமோதூத வர்ஷத்திற்குமுன் ப்ரமோதூதவஷ ஆடிமீ ரேவதீ நக்ஷத்ரம் கூடிய சுபதிநத்தில் ஸ்ரீ திருமலாசார்ய ஸ்வாமிக்குத் திருக்குமாரராய் அவதரித்தருளினர். இப் பரம்பரை மஹா வைதிக ஸந்ததி. காலம் தவருமல் சௌளோபநயநாதி ஸம்ஸ்கார மெல்லாம் முக்ய பக்ஷமாய் நடந்தபின், திருப்பதியில் மஹாமஹோபாத்யாய ஸ்ரீமத் கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமியினிடத்தில் காவ்யம் முதல் ஸாமாந்ய சாஸ்த்ரம் வரையில் எல்லாக் கல்விகளையும் நன்கு க்ரஹித்தார்.

இந்த ஸ்வாமி, ‘[illegible]’ என்று ப்ரஹ்ம ஜ்ஞாநம் அடைவதற்காக ‘[illegible]’ என்கிற ஆசார்ய லக்ஷணங்கள் எல்லாம் பரிபூர்ணமான ஸ்ரீமத் திருவஹீந்த்ரபுரம் ஸ்வாமி சின்ன ஸ்வாமி என்று புகழ்பெற்ற ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகனை ஆசார்யனுக உபஸதநம் பண்ணத் திருவுள்ளம்பற்றி, ‘உபஹார மற்ற கையுடன் ஆசார்யோபஸதநம் பண்ணக்கூடாதே; உபஹாரத்திற்கு இந்தக் கருடபுரம் க்ராமத்தில் என்ன செய்கிறது?’ என்று சிந்தித்துக்கொண் டிருக்கும்பொழுது, அசிந்திதமாக பகவத் ஸங்கல்பத்தினல் வாழைப்பழம் வீதியில் விற்க, அதைக் கண்டு ‘இதுவே ஸதாசார்ய கடாக்ஷத்திற்கு ஓர் விரகு’ என்று ஆநந்தக்கடலில் நிமக்நராய், அக்கதளீ பலத்தை வாங்கிக் கொண்டு, ஆசார்யோபஸதநம் பண்ணி, சில வர்ஷகாலம் குருகுலவாஸம் செய்து உபயவேதாந்த க்ரந்தங்களையும் யதாக்ரமமாக க்ரஹித்து, அந்த ஸ்வாமியினிடத்திலேயே உபாயாநுஷ்டாநத்தையும் அநுஷ்டித்து, அந்த ஆசார்யனுலே தமக்கு ஜ்ஞாநபுத்ரன் என்று அபிமாநிக்கப்பட்டு, இந்த ஸ்வாமியின் ஸ்வாபாவிகமான ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யங்களும் ஆசார்ய லக்ஷணங்களும் பரிபூர்ணமாக இருப்பதையும் கணிசித்து, ஒரு கால விசேஷத்தில் ஆசார்ய ஸ்தாநத்தை வஹிக்கும்படியாக அநுக்ரஹிக்கப்பட்டார். இவ்விதமான ஸதாசார்யாநுக்ரஹத்தினல் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யங்கள் தாமே அபிவ்ருத்தமாகி, உலகம் முழுமையும் மஹா சாந்த ஸ்வரூபி என்றும் மஹா வைராக்யநிதி என்றும் கொண்டாடுமாறு விளங்கி யிருந்தார். மங்களம்பாடி, வெங்கடாத்ரி அகரம், ஒலக்கூர் முதலிய இடங்களில் பாட ப்ரவசநங்கள் செய்துகொண்டு, பின்பு த்வயம் விளைந்த திருப்பதி என்றும், நமது ஸித்தாந்த ப்ரவர்த்தகரான நம் இராமாநுஜனுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் நடந்த திவ்யதேச மென்றும் புகழ்பெற்ற ஸ்ரீ மதுராந்தகத்தில் 15 வர்ஷகாலம் ஸச்சிஷ்யர்களுக்கு ஜ்ஞாநோபதேசம் செய்துகொண்டிருந்தார். பூர்வாஶ்ரமத்தில் தமது திருத்தமையனர் குமாரர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும், மதுராந்தகம் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமியும், தமது குமாரர்கள் தி. ஈ. வரததேசிகாசார்யர், தி. ஈ. திருமலாசார்யர் இவ்விருவர்களும், இன்னும் சில வித்வான்களும் இவரை ஆஶ்ரயித்து விஶேஷ ஜ்ஞாநத்தை ஸம்பாதித்து உபாயாநுஷ்டாநத்தையும் பெற்ருர்கள்.

பின்பு ‘யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்’ என்கிற ஶ்ருதியை ‘யத்க்ஷண ஏவ விரஜேத் தத்க்ஷண ஏவ ப்ரவ்ரஜேத்’ என்னும்படி செய்வித்து, மஹா வைராக்ய நிதியாய், க்ரோதநவஷ ஆவணி மாஸத்தில் ஒரு திநத்தில் ஒருவருக்கும் தெரியாமல் ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்து நித்யகர்மாநுஷ்டாநத்திற்காக எழுந்தருளும்பொழுதே, அப்படியே ஒரத்தி ஸ்ரீ க்ராமத்தில் ஸ்ரீ புத்தகரம் ஸ்வாமியினிடத்தில் துரீயாஶ்ரம ஸ்வீகாரம் செய்தருளினர்; ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் என்கிற திருநாமத்தையும் பூண்டார். பின்பு திருவஹீந்த்ரபுரம் என்கிற திவ்ய தேசத்தில் சில வர்ஷகாலம் எழுந்தருளியிருந்து, ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி முதலானவர்களுக்கு க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபத்தை அநுக்ரஹித்தருளினர். பின்பு ஸ்ரீரங்கம் தேரழுந்தூர் முதலிய திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருந்து, அவதாரம் ஸ்ரீநிவாஸ தாதாசார்யர் முதலான பல வித்வான்களுக்குக் காலக்ஷேபம் உபாயாநுஷ்டா

நம் இவைகளை அநுக்ரஹித்தருளினர். பின்பு ப்ரஜோத்பத்தி௵ சித்திரை மாஸம் முதலில் பெருமாள் கோவில் என்கிற சின்னகாஞ்சீபுரத்தில் ஸ்ரீ தேதாண்டிபட்டு ஸ்வாமி என்றும் பெரிய ஸ்வாமி என்றும் புகழ்பெற்ற ஸ்ரீரங்க ராமாநுஜ மஹாதேசிகன் ஆஸ்ரமத்தில் பதினன்கு வர்ஷகாலம் பூர்த்தியாக எழுந்தருளியிருந்து, ஸ்ரீ. உ. வே. ஈகை. ரங்க ராமாநுஜாசார்ய ஸ்வாமி, அவர் தம்பிகள் இருவர், கூத்தபாக்கம் ஸ்ரீ உ. வே. லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ. வே. புலவனூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ உ. வே. க்ருஷ்ணமாசாரிய ஸ்வாமி, ஸ்ரீ. உ. வே. பண்டித. வி. அநந்தாசார்ய ஸ்வாமி, அவர் தம்பி பண்டித வெங்கடாத்ரி அகரம் வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி முதலிய பல வித்வான்களுக்கு, ஜ்ஞாநோபதேசம் உபயவேதாந்த க்ரந்த கால க்ஷேபம் உபாயாநுஷ்டாநம் முதலியவைகளை அநுக்ரஹித்தருளினர். பரம பவித்ரமான திருமேனியுடன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளுகிற வரையில், ஸ்ரீ ஸ்வாமி தமது ஆஸ்ரம தர்மங்களைத் தவறாது அநுஷ்டித்துக்கொண்டே, "இருள் தருமா ஞாலத்தில் இனிப் பிறவி யான் வேண்டேன்" என்று கருதி, நித்யஸூரிகளுடன் வாசியற ஸதா ஸாமகாநம் செய்துகொண்டு, 'ஸஹஸ்ரஸ்தூணே விமிதே த்ருட உக்ரே யத்ர தேவாநாமதிதேவ ஆஸ்தே' என்றும் 'ஸாயோத்யா அபராஜிதா' என்றும் புகழ் பெற்ற பரமபதத்தில் திருமாமணி மண்டபத்தில் பரிபூர்ண ப்ரம்ஹாநுபவம் செய்வதற்கு, 75-ஆவது திருநக்ஷத்ரத்தில் பார்த்திவ௵ சித்திரைமீ 17உ அநாயாஸமாய்த் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினர். இந்த ஸ்வாமி இவ்வுலகத்தை விட்டு எழுந்தருள, இவ்வுலகம் பெரிய ஒளியை இழந்ததாகவே ஆகிவிட்டது. இது நமது தௌர்ப்பாக்யம் என்றே கூற வேண்டும்.

இந்த ஸ்வாமியின் திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பல ஆண்டுகள் ஸேவிக்கக் கொடுத்து வைக்காவிடினும், இந்த ஸ்வாமியின் சாந்தி ஸௌலப்யம் முதலிய கல்யாண குணங்கள் மாத்ரமாவது ஆசந்த்ரார்க்கம் எல்லா விடங்களிலும் 'வர்த்ததாமபிவர்த்ததாம்' என்று பரவும்படி குழாங்கள் குழாங்களாய்க் கூடி ஸர்வேஸ்வரனை ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ ஸ்வாமியின் சரம ஸ்லோகங்கள்

[illegible] பார்த்திவாப்தே ஶ்ரிதவதி மிஹிரே மேஷராஶிம் [illegible]
பக்ஷே [illegible] மித்ரநக்ஷத்ரயுக்தே ।
ப்ராஜ்ஞ: ஶ்ரீவாஸயோகீ [illegible] ஸர்வமித்ரம்
பேஜே ஶ்ரீவாஸராமாநுஜமுநிக்ருபயா யாதி திவ்யம் முராரே: ॥ 1.

ப்ரபோதநார்த்தாய [illegible] ।
ப்ரபோத [illegible] ஸர்வலோகேஷு [illegible]
ப்ரபோத [illegible] ॥ 2.

ஶ்ரேயோ [illegible] ।
ஸர்வலோக [illegible]
[illegible] ॥ 3.

பார்த்திவாப்த [illegible] ஸர்வ [illegible]
ஸர்வலோக [illegible] ।
ஸர்வலோக [illegible] மித்ர [illegible]
[illegible] ॥ 4.

ஸதா [illegible]
ஸதா [illegible] ।
ஸதா [illegible]
ஸதா [illegible] ॥ 5.

தொண்டரடிப்பொடி
கருடபுரம் தி. ஈ. திருமலாசார்ய தாஸன்.

(3)

ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கரது 31-வது வார்ஷிக மஹாராதநம். அவளூரில் நடந்த வைபவம்

நிகழும் பார்த்திவஸூ சித்திரைமீ 23உ (5—5—45) சனிக்கிழமை க்ருஷ்ணாஷ்டமியன்று, ஸ்ரீமதஹோபில மடம் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமத் வேதமார்க்க பரமஹம்ஸேத்யாதி விசேஷண விசிஷ்டராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய 31-வது வார்ஷிக மஹாராதநம் பெருமாள் கோவிலுக்கு மேற்கேயுள்ள அவளூர் அக்ரஹாரத்தில் தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் எழுந்தருளியுள்ள ஆச்ரமத்தில் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. ஷை மஹோத்ஸவத்தை ஸேவிப்பதற்கென்று நாட்டேரி, ப்ரம்ஹ தேசம், யசனூர், தாமல், தையாறு, சங்கரன்பாடி, சைதாப்பேட்டை, காவேரிப்பாக்கம், சிறுநாவல்பட்டு, திருவஹீந்த்ரபுரம், பெருமாள் கோவில் முதலிய ஸ்தலங்களினின்றும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலர் எழுந்தருளி யிருந்தனர். அவ்வடியார் குழாங்கள் திறத்தில் "மெய்யடியார்கள்தம் ஈட்டங் கண்டிடக் கூடுமேலது காணும்கண் பயனாவதே" என்று பொன் புரையும்வேற் குலசேகரன் பணித்த பொன் மொழிகள் அன்வர்த்தமாயின வென்னலாம்.

பிறகு ஸ்ரீ ஸ்வாமி நியமநப்படி, சித்திரைமீ 21உ (3—5—45) வியாழக்கிழமை திநம் உத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு, காலை மாலை இருவேளைகளிலும் திருவாய்மொழி தேசிக ப்ரபந்த ஸேவா காலங்களும் வேத பாராயணமும் நடத்தப்பட்டு வந்தன. சாற்றுமறை யன்று காலை பாராயணாநந்தரம் ஸ்ரீ அழகியசிங்கருடைய பாதுகை திருவுருவப் படம் ஆகிய இவைகள், சத்ர சாமராதி வாத்ய கோஷங்களுடன் வீதியில் எழுந்தருளப் பண்ணப்பட்டன. "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக் கினியன கண்டோம்" என்று அம் மஹோத்ஸவம், ஸேவித்தவர் கண்ணையும் மனத்தையும் கொள்ளை கொண்டன. தவிர:

இதுகாறும் 30 வர்ஷ காலமாய் நடந்திராத ஒரு விசேஷ வைலக்ஷண்யம் இவ் வர்ஷ மஹோத்ஸவத்துக்கு ப்ராப்தமாயிற்று. அது என்னவெனில்: அவளூர்க்கு ஸமீபத்திலுள்ள பூண்டியெனும் அக்ரஹாரத்தில், 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரக்ருதம் எழுந்தருளி யிருந்ததால், ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் சூடிக் களைந்த மலர் மாலை முதலிய பகவத் ப்ரஸாத மர்யாதைகளைத் திருவுள்ளமுவந்து ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதிக்கு அநுக்ரஹித்தருளினது மன்றி, ஸ்ரீ கார்யம் ஸ்வாமியையும் இன்னும் ஸ்ரீ மடத்துக் கைங்கர்ய பரர்களையும் அனுப்பி, இவ் வுத்ஸவத்தை மிகுந்த வைபவத்துடன் நடத்தி யருளினர் என்பதே. ஸ்ரீ அழகிய சிங்கரால் மிகுந்த பரிவோடு அனுப்பப்பட்ட பகவத் ப்ரஸாத மர்யாதைகள் சத்ர சாமர வாத்ய கோஷங்களுடன் ஸ்வஸ்திவாசந புரஸ்ஸரம் ஊர்வலமாகக் கொணரப்பட்டு, ஆச்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் ஸமர்ப்பிக்கப்பட்டபோது, ஸ்ரீ ஸ்வாமி அம் மர்யாதைகளைப் பக்தி புரஸ்ஸரம் சிரஸா வஹித்துத் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்வீகரித்துக் கொள்ளும்படி யிருந்தது. இவ்விதம் ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையால் இம் மஹோத்ஸவம் வெகு விமர்சையாக நடத்தப்பட்ட பின்னர், ஷட்ரஸோபேதமான ததீயாராதநம் விசேஷமாக நடந்தேறியது.

அநந்தரம், ஸ்ரீ ஸ்வாமியின் கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரளி னிடையே, ஸ்ரீ ஸ்வாமி திருவடியான ஒரகடம் ஸ்ரீ. உப. கொ. ஸுதர்சநாசார்யர், ஸ்ரீ ஸ்வாமியின் திவ்ய சரித்ரத்தைப் பரக்க உபந்யஸித்தார். ப்ரஹ்மதேசம் வித்வான் தூப்புல் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ ஸ்வாமி விஷயமாகச் சில ச்லோகங்கள் கவநம் பண்ணி அவற்றைப் படித்துப் பரக்கப் பொருள் கூறினர். பிறகு ஸ்ரீகார்யம் ஸ்வாமி, ஸ்ரீ ஸ்வாமியின் ஆசார்ய குண பூர்த்தியையும் அழகிய கல்யாண குணங்களையும் வியந்து, "ஸ்ரீமந் நாராயணன் அதிகாராநுகுணமாக சஸ்த்ர பாணியாயும் சாஸ்த்ரபாணியாயு மிருப்பன்; ஆசார்யனோவெனில் அதிகாரி பேதம் பாராது ஸர்வ விஷயத்திலும் சாஸ்த்ரபாணியாய்த் தன்தாள் வந்தடைந்தோரைக் காக்குமியல்வினன்; அவனைத் தேவதுல்யமாய் உபாஸித்து, அவனை அடைந்து உஜ்ஜீவிப்பதே சிஷ்ய க்ருத்யம்" என்று பலபடியாகத் தேன்மாரி பொழிவதுபோல் செவிக்கினிய செஞ்சொற்களால் ஆசார்ய வைபவத்தைப் பரக்க உபந்யஸித்தார்.

பிறகு பாராயணக்காரர்களுக்கு ஸம்பாவனைகளும் தாம்பூலமும் வழங்கப்பட்டுக் கோஷ்டி கலைந்தது.

பந்தல்குடி ரா. வரததாஸன்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய யாத்ரா மஹோத்ஸவம்

நிகழும் வைகாசிமீ 4உ பர்யந்தம் ஸ்ரீ அழகியசிங்கர் பூண்டியில் எழுந்தருளியிருந்து, பிறகு சோளஸிம்ஹபுரம் எழுந்தருளும் திருவுள்ளத்துடன் ப்ரஸ்தானமாகி, பாணாவரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்திலுள்ள மங்களம் என்னும் க்ராமத்தில் பத்துத் தினங்கள் எழுந்தருளியிருந்து, 15உ திங்கட்கிழமை கேட்டை நக்ஷத்ரத்தில் ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை அவ்விடத்தில் நடப்பித்து, இப்பொழுது சோளஸிம்ஹபுரத்தில் எழுந்தருளியிருப்பதாகத் தெரிகிறது.

* * * *

ஆசார்யர்கள் காட்டும் தொல்வழியே நல்வழி

நமது ஸித்தாந்தத்தில் ஶ்ரத்தாளுக்களாகவும் உண்மையான ஆஸ்திக்யம் உடையவர்களாகவும் இருக்கும் சில லௌகிக ப்ரபுக்கள், நமது ஆசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள நிர்ணயங்களைப் பற்றிப் பின்வருமாறு ஒரு அபிப்ராயத்தை அடிக்கடி வெளியிட்டு வருகிறார்கள். அப்படி அவர்கள் வெளியிட்டு வருவது ம்ருது ப்ரஜ்ஞர்களாக இருக்கும் ஸாது ஜனங்களுடைய புத்தியில் சலனத்தை உண்டுபண்ணுமாகையால், அவர்களாற் சொல்லப்படும் விஷயங்களிலுள்ள தோஷங்களை எடுத்துக் காட்டாமல் இருப்பது உசிதமாகமாட்டாது என்று எண்ணி, நாம் அதைப்பற்றி இவ்விடத்தில் ஸ்வல்ப விசாரம் செய்யத் துணிகின்றோம்.

அவர்கள் வெளியிடும் அபிப்ராயமாவது: ‘தத்வ நிர்ணயத்திலோ இதர விஷயங்களிலோ நமது ஆசார்யர்களின் ஸித்தாந்தமே முடிவான

கம்பர் கழகம், தேரழுந்தூர்

கம்பர் பிறந்த இவ்வூரின்கண் கம்பர் கழகம் என்ற ஓர் ஸ்தாபநம் சில ஆண்டுகளாக நிறுவப்பட்டு, வருடம்தோறும் கம்ப ராமாயணம் அரங்கேற்றப் பெற்ற தினமாகிய பங்குனி அத்தத் திருநாள் வெகு விமர்சையாக 2, 3 நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது என்பது பத்ரிகைகளின் வாயிலாகப் பலர் தெரிந்துகொண்டிருக்கலாம். அப்படி நமக்குக் கம்ப ராமாயணத்தை அமுதம்போல் அளித்த கம்பர் பெருமானுக்கு இவ்வூரில் ஓர் ஞாபகச் சின்னம் அவர் வஸித்துவந்த (கம்பர் மேட்டில்) இடத்தில் நிறுவவேண்டுமென்று, ராமாயணத்திலும் கவிஞர் பெருமானிடமும் அன்புள்ளவர்களின் ஆசையாகையால், இதை இவ்வருட கம்பர் விழாவில் நிதி திரட்டி ஷை கார்யங்களைச் செய்வதற்குப் பொது ஜனங்கள் பொருள் உதவி புரிய முன்வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது.

தற்சமயம் இதைப் பத்திரிகைகளின் வாயிலாகத்தான் பொது ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டி யிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு தங்கள் பத்ரிகையின் வாயிலாகச் சென்னையில் நடந்த ஓர் கம்பராமாயணச் சொற்பொழிவை வாசித்த நாம், தங்களுடைய தமிழ் நூல் அபிமானமும் கம்ப ராமாயணத்தில் உள்ள ஈடுபாடுகளையும் பார்க்க மிகவும் மகிழ்கிறோம். ஆகவே எங்களுடைய நோக்கத்தைத் தங்கள் பத்ரிகையின் வாயிலாக வெளிப்படுத்தி, நாங்கள் கொண்ட பெருங் கார்யத்தை ஈடேறும்படி செய்ய உதவி புரியுமாறு மிகவும் வணக்கத்துடன் தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ கம்பர் கழகம், தேரழுந்தூர்.

ஸித்தாந்தமென்று நாம் குருட்டுத்தனமாக அங்கீகரித்துப்போவது, குண தோஷங்களைப் பகுத்தறியும் யோக்யதையை யுடைய நமக்கு லக்ஷணமாக மாட்டாது. நம்முடைய ஆசார்யர்களுக்கு எட்டாத அநேக ஸூக்ஷ்மார்த்தங்கள் நமக்குத் தோன்றலாம். மூலக்ரந்தங்களில் ஆசார்யர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பாடங்களில் அஸாமஞ்ஜஸ்யம் தோன்றலாம். 'அவை ஆசார்யர்களால் வெளியிடப்படவில்லை' என்னும் காரணத்தால் அவைகளைப் பரித்யஜித்தால், நமக்குக் குணதோஷ க்ரஹண ஶக்தியைக் கொடுத்த ஈஸ்வரனுடைய உத்தேஶ்யத்திற்கு என்ன ஆயிற்று? நமது ஆசார்யர்கள் ஶ்ருதி வாக்யங்களின் தாத்பர்யத்தைத் தமது பாஷ்யாதிகளின் வழியாக வெளியிட்டிருக்கிறார்கள். அதைக்காட்டிலும் உபபந்நதரமான ஒரு அர்த்த விஶேஷம் நமக்குத் தோன்றினால் அதை நாம் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? ஆகையால் புத்திஶாலிகளாயிருக்கும் எல்லாரும் ஶ்ருதிகளைப் படித்து, தம் தம் புத்தி ஶக்தியை அவைகளிற் செலுத்தி, ஆசார்யர்களாற் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தம் ஶ்லாகார்ஹமா யிருந்தால் அதைப் பரிக்ரஹித்துப் போவதே நமக்குத் தகுந்த மார்க்கமாகும்'. இந்த ரீதியில் அவர்கள் ப்ரஸங்கிக்கிறார்கள்.

'இவர்களின் வாதத்தில் எது அஸங்கதமான அம்ஶம்? எதை நாம் ஆக்ஷேபிக்கிறோம்?' என்று கேட்கலாம். நமது ஆசார்யர்களால் உபதேஶிக்கப்படாமலுள்ள புதிய அர்த்தங்கள் மேதாவிகளான சிலருக்கு ஸ்புரிக்கலாம். "சில காரணங்களால் திவ்ய சக்ஷுஸ் முதலியவற்றைப் பெற்று அவற்றாலே அறிந்து சொல்லுமவற்றையும்" என்னும் ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்தியானது, திவ்ய சக்ஷுஸ் காரணத்தாலோ அதுபோன்ற வேறு காரணத்தாலோ, ஆசார்யர்களுக்குத் தோன்றாமல் இருக்கும் அர்த்த விஶேஷம் ஶிஷ்யர்களுக்கு ஸ்புரிக்கக்கூடும் என்பதையும், அந்த அர்த்தங்களெல்லாம் ஆசார்யனால் ஸாக்ஷாத்தாக உபதேஶிக்கப்படாவிட்டாலும் அவனுடைய ப்ரஸாதத்தாலேயே அவை ஸ்புரித்தனவென்னும் உண்மையான அநுஸந்தானத்துடன் அவை வெளியிடப்படும் பக்ஷத்தில் அவை ஆதரணீயங்களாகும் என்பதையும் நிஸ்ஸந்தேஹமாக விளக்குகின்றது. ஆனால், அம்மாதிரியான புதிய அர்த்தங்களை ஸ்புரிக்கச்செய்யும் திவ்ய சக்ஷுஸ் போன்ற காரணங்கள் எல்லாருக்கும் கிடைத்துவிடுமோ? அது விஶேஷித்த ஸுக்ருதம் செய்தவர்களுக்கே கிடைக்குமாகையால், எல்லாரும் தமது கைம்மிடுக்கால் அந்த யோக்யதையைப் பெறலாமென்று சொல்வது ஸமஞ்ஜஸமன்று. இப்படி ஒரு உபதேஶத்தைப் பரவச் செய்யும்பக்ஷத்தில், அது ஜகத்தின் வ்யவஸ்தையைக் குலைத்து விடுமன்றோ?

நிற்க, புதிதாகச் சொல்லப்படும் அர்த்தம் ஆதரணீயமாக வேண்டுமானால் அது அபாதிதமாக இருத்தல் வேண்டும். அதாவது: நமக்குத் தோன்றும் அர்த்தம், அதீந்த்ரிய விஷயங்களில் ஒரே ப்ரமாணமாக நம்மால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஶ்ருதி ஸ்ம்ருதி முதலியவைகளிற் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்களுக்கு விருத்தமாக இருக்கக்கூடாது. ஶ்ருதியில் எங்கேயாவது ஒரு வாக்யத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு நாம் சொல்லப்போகும் அர்த்தம் அபாதிதமாக இருக்கிறதா இல்லையா என்பதை விசாரியாமலே, நாம் தத்வங்களை விளக்க ஆரம்பிக்கும் பக்ஷத்தில் அது ஸாஹஸமாகமாட்டாதோ? இதை உத்தேஶித்தே நமது பெரியோர்கள் வாக்யங்களின் தாத்பர்யத்தை நிர்ணயிக்கும் விஷயத்தில் ஆறு வகைப்பட்ட லிங்கங்களைக் குறித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ந்யாய ஸஞ்சாரத்தில் நிஷ்ணாதர்களாகவும், பகவத் பக்தியினால் ஶுத்தபாவத்தைப் பெற்றவர்களாகவும், மஹத்தான ஸுக்ருத விஶேஷத்தால் திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெறக்கூடிய யோக்யதையை உடையவர்களாகவுமிருக்கும் மஹான்களன்றோ இம்மாதிரி புதிய அர்த்தம் சொல்வதற்குச் சரியான அதிகாரிகளாவார்கள்?

ப்ராம்ஶு லப்யமான பலத்தில் லோபத்தால் கையைத் தூக்கும் குள்ளனுடைய ப்ரயத்நம் போல, அத்யந்தம் மிதஜ்ஞரான நம்முடைய இந்த ஆரம்பம் அபஹாஸ்ய மாகமாட்டாதோ? ஶ்ருதிகள் விபிந்நங்கள்; ஸ்ம்ருதிகளும் அப்படியே; அவைகளை விவரித்திருக்கும் மஹர்ஷிகளுக்குள்ளும் முரண்பாடுகள் இருக்கின்றன; தர்மத்தின் தத்வம் யாருக்கு எட்டும்? ஆகையால் மஹர்ஷிகளுக்குக்கூட ப்ரயாஸ ஸாத்யமாக இருக்கும் நிலங்களில், ஶ்ருதி ஸ்ம்ருதி ஶரணர்களான பூர்வாசார்யர்கள் கண்டகஶோதநம் செய்து நடந்த வழியிலே நடப்பதே நமக்கு ப்ராப்தம். "**महाजनो येन गतस्स पन्थाः**"

* * * *

अभिजनवति ज्ञानोत्कृष्टे कुलेऽवतरन् महा
ननघगुरुणा दृष्टः काले जिहासितसंसृतिः ।
शमदममुखैर्यस्स्वैर्धर्मैर्जनान् समतोषय-
न्महति परमे व्योम्नीदानीं स भाति यतीश्वरः ॥

ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமி

சென்ற சித்திரை மீ 17உ [29-4-45] ஞாயிற்றுக்கிழமை சற்றேறக்குறைய இரவு எட்டு மணிக்கு, ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமி என்று ப்ரஸித்தரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன், பெருமாள் கோவிலில், சென்ற பத்து வர்ஷ காலமாகத் தாம் எழுந்தருளியிருந்த கேதாண்டிப்பட்டி ஸ்வாமி ஆஶ்ரமத்தில் திருநாட்டை அலங்கரித்துவிட்டார். திருநாட்டுக்கு எழுந்தருளும் காலத்தில் அந்த ஸ்வாமிக்கு 75வது திருநக்ஷத்ரம் பூர்த்தியாகி 76வது ஆரம்பித்திருந்தது. மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் ஸ்ரீ. உ. வே. தேஶிகாசார்ய ஸ்வாமியிடம் ஸாமாந்ய ஶாஸ்த்ர க்ரஹணமும், பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ திருவஹீந்த்ரபுரம் ஸ்வாமி ஸந்நிதியில் க்ரந்த காலக்ஷேபம் முதலிய மற்றை ஸகல அந்வயங்களும் நடந்தனவாம். தாம் இந்த விபூதியில் எழுந்தருளியிருந்த காலமெல்லாம் ஒரு திநம் கூடத் தவறுமல் ஆஶ்ரிதர்கள் விஷயத்தில் பரம க்ருபையுடன் ஆத்மோஜ்ஜீவநோபாயங்களைச் செய்து வந்தார். இவருடைய திருவடிகளை ஆஶ்ரயித்தவர்கள் பலர். மதுராந்தகம் வித்வான் ஸ்ரீ உப. வீரராகவாசார்ய ஸ்வாமி, வேங்கடாத்ரி அகரம் வித்வான் ஸ்ரீ உப. அநந்தாசார்ய ஸ்வாமி முதலிய அநேக வைதிக வித்வான்களும், திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ உப. தி. ஈ. சடகோபாசார்யர் முதலிய லௌகிகப் பெரியோர்களும் அவர்களுள் முக்யமானவர்கள். பூர்வாஶ்ரமத்தில் ஸ்வாமியின் ப்ராத்ரு புத்ரரான மதுராந்தகம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ ஸ்வாமியின் புத்ரர்கள் இருவரும், இவர்களுள் அந்யதமர்கள். இவர்களும் இன்னும் மற்றைப் பெரியோர்களும் இந்த மஹானுடைய உத்தர கைங்கர்யத்தில் அந்வயித்து, மஹாராதந பர்யந்தமான அந்தக் கைங்கர்யங்களை எவ்வித குறைவு மின்றிக்கே நடப்பித்தார்கள். சித்திரை மீ 27உ வியாழக்கிழமை திநம் இயல் கோஷ்டீ அந்யாத்ருஶமாக நடந்தது. அநேக திவ்ய தேசங்களிலிருந்து மர்யாதைகள் யதேஷ்டமாக வந்திருந்தன. மஹாவித்வான்களும் அநேகர் வந்திருந்தார்கள். அன்று சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி அத்யாஶ்சர்யகரமாக இருந்தது.

இந்த மஹானிடம் குடிகொண்டிருந்த கல்யாண குணங்கள் அநந்தங்களே. ஆனாலும், அவரிடம் மிகுந்த ஶோபையுடன் ப்ரகாஶித்து வந்தது ஓர் உத்தம குணம். "**तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत्**" என்று உபநிஷத் சொல்லுகிறபடி, இவர் தம்முடைய மாஹாத்ம்யத்தை வெளியில் ஆவிஷ்கரியாமல் பாலர்கள்போலவே வர்த்தித்து வந்தார். லோக ஸம்மாநமானது இந்த மஹானுக்குப் பீதி ஹேதுவாகவே இருந்தது. அது த்யாஜ்யமென்பதே பெரியோர்களுடைய கருத்து. லோக ஸம்மாநத்தையே பெரிதாக நினைத்து அதையே ப்ரார்த்தித்துப் போகும் ஜநங்களுக்கு நடுவில், அது

Regd. No. M. 4437

வேண்டாமென்று ஹார்த்தமாக உணரும் மஹான்கள் சிலர் உண்டாவது ஆச்சர்யமே.

अस्मिन्नस्तमिते सौम्ये पुण्यशीले महात्मनि ।
जगच्छून्यमिवाभाति निरानन्दं हतप्रभम् ॥

* * * *

யுத்தத்தின் முடிவு

ஜகத்திற்கு அளவற்ற நாஶத்தை விளைவித்த யுத்தம் நின்றுவிட்டதென்பதைக் கேட்டு நாம் மஹத்தான ஆறுதலை அடைகின்றோம். ஆறு வர்ஷ காலமாக ஜநங்கள் அநுபவித்த துயரத்தைப் பன்னி உரைப்பதானால் பெரும் பாரதமாகும். ஆஸுராம்ஶர்களான துஷ்டர்கள் லக்ஷக் கணக்கில் நஶித்தார்கள்; ஆனால் அது அவ்வளவாக அநுதாபத்தை ஜநிப்பிக்கவில்லை. அபராதமொன்று மறியாத கோடிக் கணக்கான ஸாது ஜநங்களும் மநஸ்ஸால் சிந்திக்க முடியாத கஷ்டங்களை அநுபவித்தார்கள் என்றால், அது ஸஹ்யமாகுமோ? ராவணனை ராமன் ஸம்ஹாரம் செய்தான்: அதைப் பொறுக்கிறோம்; லங்காதஹந காலத்தில் ஸ்த்ரீகளும் பாலர்களும் வ்ருத்தர்களும் பஸ்மமாகச் செய்யப்பட்டார்களென்பதைக் கேட்க அஶ்ம ஸாரமான ஹ்ருதயமும் உருகுகின்றது.

இந்த யுத்ததின் காரணத்தைப் பல பெயர்கள் பலவிதமாக வர்ணிக்கிறார்கள். ஊன்றிப் பார்த்தால் காரணம் ஒன்றே என்பது புலப்படும். காம க்ரோதங்களாகிற பேய்களின் ஆட்டமே இது. அந்தப் பேய்கள் தொலைந்தாலொழிய நமக்கு க்ஷேமம் கிடைக்கமாட்டாது. இனி யுத்தம் வராமல் இருப்பதற்கு என்ன உபாயத்தைக் கைப்பற்றலாமென்று அநேக நிருபகர்கள் இப்பொழுது ஒன்று சேர்ந்து ஆலோசிக்கிறார்களாம். அவர்கள், தேஹத்தினுள்ளிருக்கும் வ்யாதியை அறியாமல் அந்த வ்யாதி காரணமாக வெளியில் உண்டாகும் வ்ரணங்களுக்கு மாத்ரம் சிகித்ஸை செய்துவரும் வைத்யருக்குத் துல்யர்களே. ஆஸுரபாவம் தொலையவேண்டும்; ஸாத்விக பாவம் பரவி எல்லாரும் பிறருடைய ஹிதத்தைத் தேடுபவர்களாக இருத்தல் வேண்டும். இந்த வைத்யத்தைச் செய்வதற்கு எங்கிருந்து யார் வரப்போகிறார்? மஹாஜநங்களுக்குள் இந்த மநோபாவத்தைப் புகட்ட எவர் ஶக்தராவார்? ஸ்ரீ ப்ராண யனே இந்தச் சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

2|0|38

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவஸூ ஆனிமீ

1உ	வியாழக்கிழமை	—	மிதுந ரவி 29-0, ஷடஶீதி, ஶூந்ய திதி.
2உ	வெள்ளிக்கிழமை	—	ஶூந்ய திதி.
3உ	சனிக்கிழமை	—	மிதுந ஶுக்ல ஸப்தமீ திதி.
8உ	வியாழக்கிழமை	—	ஏகாதஶீ திதி, ஸர்வ ஏகாதஶீ, பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்.
12உ	திங்கட்கிழமை	—	பூர்ணிமா. சந்த்ர க்ரஹணம், பூர்ணிமா திதி ஶ்ராத்தத்தை 13உ செவ்வாய்க்கிழமை நடத்தவேண்டும்.
18உ	ஞாயிற்றுக்கிழமை	—	ஷஷ்டீ ஸப்தமீ திதி த்வயம்.
19உ	திட்கட்கிழமை	—	அஷ்டமீ திதி.
22உ	வியாழக்கிழமை	—	ஏகாதஶீ திதி.
23உ	வெள்ளிக்கிழமை	—	ஏகாதஶீ வ்ரதம்.
26உ	திங்கட்கிழமை	—	அமாவாஸ்யை.
31உ	சனிக்கிழமை	—	மிதுந ஶுக்ல பஞ்சமீ திதி.
32உ	ஞாயிற்றுக்கிழமை	—	மிதுந ஶுக்ல ஷஷ்டீ திதி.

[12உ திங்கட்கிழமை சந்த்ர க்ரஹணம். க்ரஹண காலம் இரவு 8 ம. 4 நிமி: மத்ய காலம் 9-40: மோக்ஷ காலம் 11-20. பகல் முதல் யாமத்துக்குள் போஜநம்.]

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5. Ramaswami Street, Tyagarayanagar, Madras